بسم اللہ الرحمن الرحیم    نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم    وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர் காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 33

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

18 முஹர்ரம் 1438 ஹிஜ்ரி கமரி    20 இகா 1395 ஹிஜ்ரி ஷம்ஸி    20 அக்டோபர் 2016


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எவர் என்னை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர் இறைவனையும் தூதரையும் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால், என்னைப் பற்றி இறைவனும் தூதரும் செய்த முன்னறிவிப்பு இருக்கின்றது. எந்த நபர் இறைவன் மற்றும் தூதர் கூறுபவற்றை ஏற்றுக் கொள்ளமாட்டாரோ, திருக்குர்ஆனை பொய்ப்படுத்துகின்றாரோ, தெரிந்து கொண்டே அல்லாஹ்வின் அடையாளங்களை மறுக்கின்றாரோ, எனக்கு ஆதரவாக நூற்றுக்கணக்கான அடையாளங்கள் இருந்தும் என்னை இட்டுக்கட்டி பொய் கூறுபவன் என்று கூறுகின்றாரோ அவர் எவ்வாறு நம்பிக்கை கொண்டவராக ஆக முடியும்?**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

*கேள்வி (6) :* கலிமா கூறுபவரையும் கிப்லாவைச் சார்ந்தவர்களையும் காஃபிர் என்று கூறுவது எவ்வகையிலும் சரியல்ல என்று தாங்கள் ஆயிரக்கணக்கான இடங்களில் எழுதியுள்ளீர்கள். இதிலிருந்தும் உங்களை காஃபிர் என்று கூறுவதனால் காஃபிராகி விடுகின்ற அந்த நம்பிக்கை கொண்டவர்களைத் தவிர உங்களை ஏற்றுக் கொள்ளாததனால் எவரும் காஃபிராகி விட மாட்டார் என்று தெளிவாகத் தெரிகின்றது. ஆனால், எனது அழைப்பு சென்றடைந்துள்ள ஒவ்வொருவரும் என்னை ஏற்றுக் கொள்ள -வில்லையென்றால் அவர் முஸ்லிம் அல்லர் என்று அப்துல் ஹகீம் கான் அவர்களுக்கு நீங்கள் எழுதியுள்ளீர்கள். உங்களது இந்த கூற்றிற்கும் இதற்கு முன்னுள்ள நூல்களிலுள்ள கூற்றிற்கும் இடையில் முரண்பாடு இருக்கின்றது. அதாவது, முதலில் தாங்கள் திரியாகுல் குலூப் போன்ற நூல்களில் என்னை ஏற்றுக் கொள்ளாததனால் எவரும் காஃபிராகி விடுவதில்லை என்று எழுதியுள்ளீர்கள். ஆனால், இப்போது என்னை மறுப்பதனால் ஒருவர் காஃபிராகி விடுகின்றார் என்று எழுதியுள்ளீர்கள்.

*பதில் :* தாங்கள் காஃபிர் என்று கூறுபவரையும் ஏற்றுக் கொள்ளாதவரையும் இரு வகையான மனிதர்களாகக் கருதுகின்றீர்கள் என்பது வியப்பிற்குரிய விஷயமாக இருக்கின்றது. ஆனால், இறைவனது பார்வையில் அவர்கள் ஒரே வகையான மனிதர்கள்தான். ஏனென்றால், என்னை ஏற்றுக் கொள்ளாதவர் என்னை இட்டுக்கட்டி பொய் கூறுபவனாகக் கருதுவதன் காரணமாகவே என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. இதைப் பற்றி இறைவன் فَمَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰی عَلَی اللّٰهِ كَذِبًا اَوْ كَذَّبَ بِاٰيٰتِهٖ அல்லாஹ்வுக்கு எதிராக பொய்யை இட்டுக்கட்டுபவனை விடவும் அல்லது அவனது வசனங்களை பொய்யாக்குபவனை விடவும் பெரும் அநீதியிழைப்பவன் எவன் ? என்று கூறுகின்றான். **(10:18)** அதாவது, இருவர்தான் பெரும் காஃபிர்கள் ஆவர். ஒருவர் அல்லாஹ்வுக்கு எதிராகப் பொய்யை இட்டுக் கட்டுபவர். [1]இரண்டாமவர், இறைவனின் வசனங்களைப் பொய்யாக்குபவர். என்னை பொய்ப்படுத்துபவனின் பார்வையில் இறைவனுக்கு எதிராக பொய்யை இட்டுக்கட்டுபவனாக நான் இருக்கும் நிலையில் நான் காஃபிர் மட்டுமல்ல. பெரும் காஃபிராக ஆகி விட்டேன். நான் பொய்யை இட்டுக்கட்டுபவனாக இல்லாமல் இருந்தால் சந்தேகமின்றி அந்த குஃப்ர் (அதாவது மறுப்பின் விளைவு) அவர் மீதே விழும். இதனை அல்லாஹ் சுயமே இந்த வசனத்தில் கூறியுள்ளான். இதை தவிர எவர் என்னை ஏற்றுக் கொள்வதில்லையோ அவர் இறைவனையும் தூதரையும் கூட ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனென்றால், என்னைப் பற்றி இறைவனும் தூதரும் செய்த முன்னறிவிப்பு இருக்கின்றது. அதாவது, ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறுதிக் காலத்தில் எனது உம்மத்திலிருந்தே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருவார் என்று முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிஃராஜின் இரவில் நான் மர்யமின் மகன் ஈஸா அவர்களை இவ்வுலகை விட்டு சென்று விட்ட அந்த நபிமார்களுடன் இருப்பதைப் பார்த்தேன் என்றும் தெரிவித்துள்ளார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இரண்டாவது வானத்தில் (ஹஸ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஆகிய) அவர்களை ஷஹீதான யஹ்யா (அலை) அவர்களுக்கு அருகில் இருப்பதைப் பார்த்துள்ளார்கள். மேலும் அல்லாஹ் திருக்குர்ஆனில் மர்யமின் மகன் ஈஸா இறந்து விட்டார் என்ற தெரிவித்துள்ளான். இறைவன் எனது உண்மைக்கு சாட்சி பகர்வதற்காக மூன்று இலட்சத்திற்கும் அதிகமாக வானத்தின் அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். மேலும் வானத்தில் ரமலான் மாதத்தில் சூரிய சந்திர கிரகணங்கள் நிகழ்ந்தன. எந்த நபர் இறைவன் மற்றும் தூதர் கூறுபவற்றை ஏற்றுக் கொள்ளமாட்டாரோ, திருக்குர்ஆனை பொய்யாக்குகின்றாரோ, தெரிந்து கொண்டே அல்லாஹ்வின் அடையாளங்களை மறுக்கின்றாரோ எனக்கு ஆதரவாக நூற்றுக்கணக்கான அடையாளங்கள் இருந்தும் என்னை இட்டுக்கட்டி பொய் கூறுபவன் என்று கூறுகின்றாரோ அவர் எவ்வாறு நம்பிக்கை கொண்டவராக ஆக முடியும் ? அவர் நம்பிக்கை கொண்டவராக இருந்தால் நான் இட்டுக்கட்டி பொய் கூறுபவனாக இருப்பதால் நான் காஃபிராகி விடுவேன். ஏனென்றால், நான் அவரது பார்வையில் இட்டுக்கட்டி பொய் கூறுபவனாக இருக்கின்றேன். அல்லாஹ் திருக்குர்ஆனில்,

قَالَتِ الْاَعْرَابُ اٰمَنَّا ؕ قُلْ لَّمْ تُؤْمِنُوْا وَلٰكِنْ قُوْلُوْٓا اَسْلَمْنَا وَلَمَّا يَدْخُلِ الْاِيْمَانُ فِيْ قُلُوْبِكُمْ

அரபு நாட்டிலுள்ள நாட்டுப்புறவாசிகள் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம் என்று கூறுகின்றனர். நீர் கூறுவீராக! நீங்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. எனினும் நாங்கள் கட்டுப்பட்டு நடக்கின்றோம் என்று நீங்கள் கூறுங்கள். ஈமான் இப்போது உங்களது உள்ளங்களில் நுழையவில்லை என்று கூறுகின்றான். **(49:15)** இறைவன் கட்டுப்பட்டு நடக்கின்றவர்களுக்கு நம்பிக்கை கொண்டவர் என்று பெயர் வைக்கவில்லை. அவ்வாறிருக்க எவர்கள் பகிரங்கமாக இறைவனின் வார்த்தைகளைப் பொய்யாக்குகின்றனரோ அவர்கள் இறைவனின் பார்வையில் எப்படி நம்பிக்கை கொண்டவர்களாக ஆக முடியும் ? பூமியிலும் வானத்திலும் வெளிப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான அடையாளங்களைப் பார்த்த பிறகும் கூட

(தொடர்ச்சி 6 -வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

உலகில் வருகிற ஒவ்வொரு மனிதனும் ஒருநாள் உலகை விட்டு விட்டு விடை பெற்றுச் செல்ல வேண்டியதுள்ளது. இன்னும் சொல்வதாயின், எந்தவொரு பொருளுக்கும் நிரந்தர தன்மையில்லை. சிலர் மிகவும் சிறிய வயதில் அல்லாஹ்விடம் போய் விடுகின்றனர். அல்லாஹ் அவர்களை தன் பக்கம் அழைத்துக் கொள்கிறான். சிலர் இளம் வயதிலும், சிலர் நீண்ட வயதிற்குப் பிறகும், சிலர் தமது வாழ்நாளில் அதிகபட்ச எல்லையையும் சென்றடைகிறார்கள். அதனை அல்லாஹ் திருக்குர்ஆனில் 'அர்ஸலில் உமர்' என்று கூறுகிறான். இந்த வயதை அடைந்த பிறகு அவருக்கு சிறு வயதின் தேவைகளும் மேலும் அறிவின்மையும் மீண்டும் ஆரம்பமாகின்றன. இறுதியில் அவர்களும் இவ்வுலகை விட்டு விடை பெறுகின்றனர்.

அல்லாஹ் நமக்கு ஒவ்வொரு கஷ்டத்திலும் துக்கத்திலும் ஆதங்கத்திலும் அதிர்ச்சியின் நிலையிலும் அல்லாஹ்வின் திருப்தியின் மீது திருப்தி அடைந்தவாறு இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் என்ற துஆவை செய்யுமாறு கற்றுத் தந்துள்ளான். அதாவது, நாம் அல்லாஹ்வுக்குரியவர்கள். அவனிடமே திரும்பிச் செல்பவர்களாக இருக்கிறோம். இந்த உலகிலிருந்து பிரிந்து செல்பவருக்கு நெருக்கமானவர்கள் அளவற்ற பொறுமையை மேற்கொண்டு இந்த துஆவை ஓதும்போது மர்ஹூமின் தகுதியை அல்லாஹ் உயர்த்துகிறான். அதே வேளையில் அவரது பின்னால் இருப்பவர்களின் மன நிம்மதிக்கும் ஏற்பாடு செய்கிறான்.

மதிப்பிற்குரிய சலீம் ஸஃபர் சாஹிப் அவர்களின் மகனான யூ.கே -விலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவர் அன்பிற்குரிய ரிஸா சலீம் அவர்கள் இத்தாயில் Hiking -ன்போது ஒரு விபத்தில் அகால மரணமடைந்தார். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா ஹாஸிர் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 16 செப்டம்பர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **16 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ۔
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ۔ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ۔

உலகில் வருகிற ஒவ்வொரு மனிதனும் ஒருநாள் உலகை விட்டு விட்டு விடை பெற்றுச் செல்ல வேண்டியதுள்ளது. இன்னும் சொல்வதாயின், எந்தவொரு பொருளுக்கும் நிரந்தர தன்மையில்லை. சிலர் மிகவும் சிறிய வயதில் அல்லாஹ்விடம் போய் விடுகின்றனர். அல்லாஹ் அவர்களை தன் பக்கம் அழைத்துக் கொள்கிறான். சிலர் இளம் வயதிலும், சிலர் நீண்ட வயதிற்குப் பிறகும், சிலர் தமது வாழ்நாளில் அதிகபட்ச எல்லையையும் சென்றடைகிறார்கள். அதனை அல்லாஹ் திருக்குர்ஆனில் 'அர்ஸலில் உமர்' என்று கூறுகிறான். இந்த வயதை அடைந்த பிறகு அவருக்கு சிறு வயதின் தேவைகளும் மேலும் அறிவின்மையும் மீண்டும் ஆரம்பமாகின்றன. இறுதியில் அவர்களும் இவ்வுலகை விட்டு விடை பெறுகின்றனர். ஒவ்வொருவருக்கும் தமது நெருங்கிய உறவினர்களது பிரிவின்போது அப்பிரிவின் துயரம் ஏற்படுகிறது. அவர் எந்த வயதில் விடை பெற்றுச் சொன்றாலும் சரியே!

ஆனால், சில இருப்புகள் எத்தகையவை எனில் அவர்கள் வஃபாத் ஆகும்போது ஆதங்கப்படுபவர்களின் வட்டம் மிகவும் பரந்ததாகி விடுகிறது. அத்தகைய மிகவும் விருப்பத்திற்குரிய மனிதன் இளம் வயதில் திடீரென்று இவ்வுலகை விட்டு விடை பெற்றுச் சென்று விட்டால் துக்கமும், ஆதங்கமும் மிக அதிகமாகி விடுகிறது. ஆனால், அல்லாஹ் நமக்கு ஒவ்வொரு கஷ்டத்திலும் துக்கத்திலும் ஆதங்கத்திலும் அதிர்ச்சியின் நிலையிலும் அல்லாஹ்வின் திருப்தியின் மீது திருப்தி அடைந்தவாறு இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் என்ற துஆவை செய்யுமாறு கற்றுத் தந்துள்ளான். அதாவது, நாம் அல்லாஹ்வுக்குரியவர்கள். அவனிடமே திரும்பிச் செல்பவர்களாக இருக்கிறோம். இந்த உலகிலிருந்து பிரிந்து செல்பவருக்கு நெருக்கமானவர்கள் அளவற்ற பொறுமையை மேற்கொண்டு இந்த துஆவை ஓதும்போது மர்ஹூமின் தகுதியை அல்லாஹ் உயர்த்துகிறான். அதே வேளையில் அவரது பின்னால் இருப்பவர்களின் மன நிம்மதிக்கும் ஏற்பாடு செய்கிறான்.

கடந்த நாட்களில் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் நமது மிகவும் அன்பிற்குரிய மாணவர் ரிஸா சலீம் ஒரு விபத்தில் தமது 20 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

ஒருவர் என்னிடம் கூறினார்: மர்ஹூம் வஃபாத் ஆன இரண்டு மணி நேரத்திற்குள் மர்ஹூமின் வீட்டிற்கு இரங்கல் தெரிவிப்பதற்காக நான் எனது மனைவியுடன் சென்றேன். மர்ஹூமின் தாயார், 'அவர் எனது மிக அன்பிற்குரிய மகனாக இருந்தார். ஆனால், அவரை அழைத்தவன் அதனை விட அன்பிற்குரியவன்' என்று கூறினார். இதனைக் கேட்டு எனது மனைவியின் வியப்பிற்கு எல்லையே இல்லாமல் ஆகி விட்டது. இதுவே நம்பிக்கை கொண்டவரின் மகிமைக்கு ஏற்ற பதிலாகும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களிடம் காணப்படுகிறது. எந்த புலம்பலும் இல்லை. ஆயினும், துயரம் ஏற்படுகிறதுதான். அதில் மனிதன் அழவும் செய்கிறான். துக்கம் அதன் எல்லையை தொடவும் செய்கிறது. தாயை விட அதிகமாக ஒரு வாலிப மகனின் மரணத்தில் வேறு யாருக்கு அதிக துயரம் இருக்க முடியும்? மரணத்தின் உணர்வு இருக்க முடியும்? அல்லது ஒரு தந்தையை விட வேறு யாருக்கு ஒரு வாலிப மகனின் பிரிவு உணர்வு இருக்க முடியும்? அவர்களைப் பற்றி தான் இங்கு கூறப்பட்டது. விபத்து பற்றி கேள்விப்பட்டதுமே மிகவும் அதிர்ச்சியுற்றிருந்தார்கள். அழவும் செய்தார்கள். துஆவும் செய்திருப்பார்கள். ஆனால், சூழ்நிலை தெளிவாகி மரணத்தின் செய்தி கிடைத்த சிறிது நேரம் கழிந்த நிலையில், மரணம் நிகழ்ந்து விட்டது. இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் என்று கூறியவாறு முழுமையான அமைதியை அடைந்து விட்டார்கள். எனவே, இதுவே உண்மையான நம்பிக்கை கொண்டவரின் மகிமையாகும்.

வாலிப மகனின் திடீர் மரணத்தை இவ்வளவு எளிதில் மறந்து விட முடியாது. ஆனால், ஒரு முஃமின் தனது வேதனையை அல்லாஹ்வின் முன் நின்று எடுத்து வைக்கிறார்; அழவும் செய்கிறார். மன நிம்மதிக்காகவும், மர்ஹூமின் தகுதியை உயர்த்துவதற்காகவும் துஆவும் செய்கிறார். நான் ஜெர்மனி பயணத்தில் இருந்தேன். திரும்பி வருவதற்கான பயணம் தொடங்கி இருந்தது. பயணம் புறப்படும் முன்பே விபத்து நடந்தது குறித்து செய்தி கிடைத்து விட்டது. வழியிலேயே வஃபாத் செய்தியும் கிடைத்தது. அன்பிற்குரிய அந்த இளைஞரின் முகம் மீண்டும் மீண்டும் என் முன் வந்து கொண்டிருந்தது. துஆவுக்கும் வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருந்தது. மிக மிக அன்பிற்குரிய பையனாக இருந்தார்.

யூ.கே –வின் ஜாமிஆவில் படிக்கும் மாணவர்கள் என்னை முறைப்படி சந்தித்து வந்ததினால் ஒவ்வொருவருடனும் எனக்கு தொடர்பு இருந்தது. சந்திப்பின்போது எனக்கு நேரம் இருந்தால் அவர்கள் என்னிடம் கேள்வி கேட்டு பதிலும் பெறுவார்கள். இந்தப் பையனுடன் எனக்கு கடைசி சந்திப்பு நடந்தபோது அவரது மனதில் சில கேள்விகள் இருந்தன. அதற்கு நான் பதில் அளிக்க சிறிது நேரம் பிடித்தது. விளக்கமாக நான் எடுத்துக் கூறினேன். அவரது தந்தையார் கூறும்போதுதான் எனக்கு நினைவுக்கு வந்தது. இந்த சந்திப்பிற்குப் பிறகு இவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தார். இன்று எனது சந்திப்பு கிட்டத்தட்ட 15–16 நிமிடங்கள் நிகழ்ந்தது. அதில் தனது எல்லா கேள்விகளுக்கும் விரிவான பதில் கிடைத்ததாக கூறியிருக்கிறார். அவரது கண்களில் கிலாஃபத்தின் மீது குறிப்பான பற்று மற்றும் ஒளி தென்பட்டது. இவர் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேரும்போது இவருக்கு ஒரு வேளை விளையாட்டுகளில்தான் அதிக ஆர்வம் இருக்கும் என்பது எனது எண்ணமாக இருந்தது. சிறு வயதிற்குரிய களங்கமற்ற தூய்மையும் பற்றும் இருக்கலாம். ஆனால் இந்த பையன் எனது மதிப்பீட்டை முற்றிலும் தவறாக்கிக் காட்டி விட்டார். படிப்பிலும் நல்ல கெட்டிக்காரராக இருந்தார். கண்டிப்பாக விளையாட்டில் நல்ல ஆர்வம் இருந்தது. மேலும், கலப்பற்ற மனத்தூய்மையிலும் பற்றிலும் கூட மிகவும் உயர்ந்திருந்தார். கிலாஃபத் மற்றும் மார்க்கத்தை பாதுகாப்பதில் 'நான் கூரிய வாள் ஆக இருப்பேன்' என்ற உணர்வு அவர்களிடம் இருந்தது.

அவரது சில நிலைமைகளை நண்பர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர் நான் கூறியதைச் செய்தும் காட்டியுள்ளார்கள். எண்ணற்ற எழுதக்கூடிய நண்பர்களும், அவரது வகுப்புத் தோழர்களும் ஜாமிஆவின் மாணவர்களும், சகோதர சகோதரிகளும், பெற்றோர்களும் என்னிடம் அவரது சிறப்பைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் அனைவருமே ஒரு விஷயத்தை எழுதியுள்ளார்கள். எளிமை, நன்னடத்தை, மார்க்க தன்மானம், கிலாஃபத்துடன் தொடர்பு, பற்று, விருந்தோம்பல், உணர்வுகளுக்கு மதிப்பு கொடுப்பது ஆகியவை இவரது சிறப்புப் பண்புகளாக விளங்கின. அத்தகையோர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

அவர்களுடைய வழிகாட்டலுக்கிணங்க சொர்க்கம் கடமையாக்கப்பட்டவர்களைச் சேர்ந்தவர் ஆவார்கள். ஒவ்வொருவரும் அவரை பாராட்டவே செய்கின்றனர். இந்தப் பையன் சிறப்பான மார்க்க உணர்வு கொண்டவராக விளங்கினார். விளையாட்டு, மலை ஏறுதல் போன்றவற்றில் அவர் பங்கேற்பதும் கூட மார்க்க சேவைக்கு ஆரோக்கியமான உடல் தேவை என்பதற்காகவே இருக்கலாம்.

அவரைப் பற்றிய விபரங்களை எழுதுபவர்கள் எழுதுகிறார்கள்: அவரைப் பற்றி எழுதுகின்ற ஒவ்வொருவரும் அவரது சிறப்புகளை எடுத்துக் கூறியுள்ளனர். ரிஸா ஸலீம் என்ற அன்பிற்குரிய அப்பையன் நமது Private Secretary அலுவலகத்தின் பணியாளரான ஸலீம் ஸஃபர் சாஹிபின் மகன் ஆவார். 10 செப்டம்பர் 2016 அன்று இத்தாலியில் Hiking –ன் போது ஒரு விபத்தில் வஃபாத் ஆகி விட்டார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

இவர் 27 செப்டம்பர் 1993 –ஆம் ஆண்டு யூ.கே –விலுள்ள கில்ஃபோர்ட்டில் பிறந்தார். இவர் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்தவர். இவரது குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவரது முப்பாட்டனார் கண்ணியத்திற்குரிய அலாவுதீன் சாஹிப் மூலமாக உருவானது. இவர் காதியானுக்கு அருகிலுள்ள கிராமத்தைச் சார்ந்தவர். இந்தப் பையன் 2012 –ல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் படிப்பதற்காக சேர்ந்தார். இவரது குடும்பத்தின் முதல் முரப்பியாக ஆகிக் கொண்டிருந்தார். மூன்றாவது வருடம் தேர்வாகி நான்காவது வருடத்தில் நுழையவிருந்தார். மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார். வஸிய்யத் படிவத்தை நிரப்பித் தந்திருந்தார். நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. இவரது வஸிய்யத் ஒப்புக் கொள்ளப்பட்டதாக நான் வஸிய்யத் அலுவலகத்திற்கு எழுதி விட்டேன். இவருக்கு பெற்றோரைத் தவிர இரண்டு சகோதரிகள், இரண்டு சகோதரர்கள் இருக்கின்றனர்.

ஹாஃபிஸ் அஜாஸ் அஹ்மது சாஹிப் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஆசிரியர் ஆவார். இவர் Hiking குழுவின் இன்சார்ஜ் ஆக இருந்தார். அக்குழுவுடன் சென்றிருந்தார். அவர் நடந்த சம்பவத்தை விவரித்தவாறு எழுதுகிறார்: நாங்கள் ஒரு நாள் முன்பு மலையின் உச்சியை அடைந்தோம். இரவில் கிட்டத்தட்ட 500 அடிக்கு கீழ் ஒரு குடிசையில் தங்கினோம். உச்சியிலிருந்து கீழே வந்து விட்டோம். சிரமமான பாதையைக் கடந்து விட்டிருந்தோம். எங்களுடன் சுமார் 10 பேர் பிற மலை ஏறுபவர்களும் இருந்தனர். காலையில் சுமார் 8.00 மணிக்கு நாங்கள் குடிசையிலிருந்து திரும்புவதற்காக புறப்பட்டோம். தட்பவெப்பநிலை முற்றிலும் நன்றாக இருந்தது. நாங்கள் எல்லாரும் ஒன்றாக போய்க் கொண்டிருந்தோம். ஒரேடியாக அவரது கால் வழுக்கியது அல்லது ஏதாவது ஒரு கல் தட்டியது. அதனால் இவரால் சமாளிக்க முடியாமற் போனது. வேகமாக வழுக்கிக் கொண்டே போன காரணத்தால் வேகமாக முன் பக்கம் போய்க் கொண்டிருந்தார். கட்டுப்படுத்த முடியவில்லை. குப்புற விழுந்து விட்டார். தலையில் கவசம் அணிந்திருந்தார். இருந்தும் கீழே விழுந்ததால் தலையில் அடிபட்டது. டாக்டர்களுடைய கருத்தின்படி கீழே விழும் முன்பே அடிபடும் முன்பே மயக்கம் ஏற்பட்டிருக்கலாம் அல்லது மூச்சு நின்று விட்டது. அதனால் நேரே கீழே விழுந்து விட்டார். எவ்வாறிருப்பினும் நான் பிடிப்பதற்கு முயற்சி செய்தேன்; முடியவில்லை. ஹுமாயூன் என்பவர் முன்னால் சென்று கொண்டிருந்தார். அவரும் பிடிக்க முயன்றார். ஹுமாயூனின் கை படவும் செய்தது. இருந்தும் பிடிப்பதில் வெற்றி பெற முடியவில்லை. ரிஸா ஸலீம் பள்ளத்தை நோக்கி விழுந்து விட்டார். விபத்தைப் பார்த்து மற்ற மாணவர்களும் கீழே இறங்க முயன்றனர். நான் அவர்களை தடுத்து விட்டேன். அதனால் பெரும் சேதம் ஏற்படும் ஆபத்து இருந்தது என்று கூறுகிறார்.

அதன் பிறகு பிற மலை ஏறுபவர்களின் உதவியுடன் நமது மாணவர்களை மேலே திரும்ப வரச் செய்தோம். ஏனெனில் அவர்கள் அதிக அளவுக்கு கீழே இறங்கி விட்டார்கள். உடனிருந்த மாணவர்கள் யாருக்கும் துக்கத்தின் காரணமாக நடப்பதற்கு தைரியம் இல்லாமல் இருந்தது. விபந்த நடந்தவுடன் Emergency Service –க்கு உடனே போன் மூலம் தகவல் தரப்பட்டது. 20 நிமிடத்திற்குள் ஹெலிகாப்டர் வந்தது. ரிஸா ஸலீம் நமது கண்களுக்கு முன் இருந்தார். எனவே ஹெலிகாப்டருக்கு அவர் விழுந்த இடத்தைக் கூறினோம். அங்கு அவர்கள் ஹெலிகாப்டர் உதவியுடன் தமது ஆட்களை இறக்கினர். எல்லாரும் ஹெலிகாப்டரின் இறங்குதளம் செல்லும் வரை ரிஸா ஸலீம் உடைய மரணத்தைத் தெரிவிக்கவில்லை. எல்லா மாணவர்களும் ஹெலிகாப்டர் தளம் வரை நலமுடன் வந்து சேர்ந்த பிறகு Emergency Service –க்காரர்கள் ரிஸா ஸலீம் உடைய மரணச் செய்தியை தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு ஒரு மணி நேரத்திற்குள்ளேயே அருகிலுள்ள நகரத்திற்கு எல்லா மாணவர்களும் கொண்டு சேர்க்கப்பட்டார்கள். விபத்து நடந்த போது பருவ நிலை முற்றிலும் தெளிவாக இருந்தது. எந்த தடத்தில் நாங்கள் சென்றோமோ அந்த தடத்திற்கே Normal Track to Peak என்று பெயர்.

ரிஸா ஸலீமுடைய தந்தையாரும் அங்கு சென்றார். அவர் என்னிடம் கூறினார்: அங்குள்ள மக்கள் இவரை சந்தித்து இந்த தடம் முற்றிலும் Normal Track தான் என்று கூறினர். எந்த பிரச்சனையும் இங்கு இருந்ததில்லை. என் மகனும் அந்த இடத்தைக் கடந்து தான் சென்றிருந்தார். அங்கு வந்த ஒரு வயதானவர் கூறினார்: நான் தினமும் இங்கு வாக்கிங் செல்கிறேன். சிறுவர் பெரியவர் எல்லாருமே இந்த வழித்தடம் வழியாகச் செல்கின்றனர். உள்ளூர் மக்களுக்கு இந்த விபத்து பற்றிய செய்தி தெரிந்ததும் கூறினார்கள். வெளிப்படையாக இந்த Track –ல் ஆபத்து எதுவும் இருந்ததில்லை. அல்லாஹ்வுடைய நியதி என்றே தெரிகிறது. எவ்வாறிருந்த போதிலும் இந்த எல்லா விவரத்தையும் நான் இங்கு கூறக் காரணம் சிலர் போன் மூலம் தூதுச் செய்திகள், வாட்ஸ்அப் அல்லது பிற ஊடகங்கள் மூலம் தவறான கருத்துக்களை வெளியிடுகின்றனர். ஒரு வேளை இவர் தனியாக வெளியே போயிருக்கலாம். தட்பவெப்பநிலை மோசமாக இருந்திருக்கலாம். முழுமையான ஏற்பாடுகள் இல்லாமல் இருந்திருக்கலாம். (அதற்குரிய பிரத்யேக) உடைகள் அணியாமல் இருந்திருக்கலாம் என்று கூறுகின்றனர். உள்ளூர் பத்திரிகை ஒன்று கூட அவசியமான எல்லா உடைகளையும் அவர் அணிந்திருந்தனர் என்று எழுதியிருக்கின்றது. எனவே கருத்து தெரிவிப்பவர்கள் அறிவை பயன்படுத்த வேண்டும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் வீணான கருத்துக்களை தெரிவிப்பதை விடுத்து அனுதாப உணர்வைத்தான் வெளிப்படுத்த வேண்டும். இதில் ஏற்பாடு செய்தவர்களின் தவறும் இல்லை. வேறு எவரது தவறும் இல்லை. அல்லாஹ் ஒரு நேரத்தை வைத்திருந்தான். அது வந்து விட்டிருந்தது. கால் வழுக்கியதா? தலை சுற்றியதா? எப்படி விழுந்தான்? எப்படி இருந்தாலும் ஒரு நியதி இருந்தது. அல்லாஹ் இவ்வளவு வாழ்வை அவருக்கு வைத்திருந்தான். எவ்வாறிருப்பினும் அவருடன் இருந்த மற்ற பையன்களும் அதிர்ச்சியில் இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கும் தைரியத்தை வழங்குவானாக! இயல்பு வாழ்வுக்கு அவர்கள் விரைவில் திரும்புவார்களாக! நினைவுகளை மறக்க முடியாதுதான். நான் ஏற்கனவே கூறியது போன்று நண்பர்களுக்கிடையே பேச்சு நடந்து கொண்டேதான் இருக்கும். ஆனால் இதனால் எந்த விரக்தியும் அடைய வேண்டாம். ஜாமிஆ மாணவர்கள் பயப்பட வேண்டாம்.

ஸலீம் ஸஃபர் சாஹிப் எழுதுகிறார்: எனது மிகவும் அன்பிற்குரிய பையன். பல நற்சிறப்புகள் வாய்ந்தவன். சிலவற்றைக் கூறுகிறேன் என்கிறார். எப்போதும் உண்மையையே பேசுவார். ஒரு தவறு அவரிடம் ஏற்பட்டாலும் அதை அவர் மறைத்ததில்லை. தனது தவறுகளை ஒப்புக் கொள்வதும் உண்மையின் மீது நிலைத்து நிற்பதும் அவரது வழக்கங்களில் அடங்கியிருந்தது. சிறுவர்களிடம் மிகவும் அன்பு செலுத்துவார். தனது சகோதரியின் குழந்தைகளை மிகவும் நேசிப்பார். சகோதரி தனது குழந்தைகளை கண்டித்தால் இவர் அழுது விடும் அளவுக்கு உணர்வுள்ளவராக இருந்தார். குழந்தைகளை அடிப்பதால் சீர்திருத்தம் ஏற்படாது என்று கூறுவார். எனது சந்திப்பு பற்றி நான் முதலில் குறிப்பிட்டேன். இவர்களும் அதனை எழுதியிருக்கிறார். எப்போது சந்திப்பு நிகழ்ந்தாலும் மிகவும் மகிழ்ச்சியுடன் அதனைப் பற்றி போன் செய்து கூறுவார். இன்று எனது சந்திப்பு தனக்கு நிகழ்ந்தது என்பதை கூறுவார். இவ்வாறு தனது மகிழ்ச்சியில் எங்களையும் சேர்த்து விடுவார் என்று கூறுகிறார். சந்திப்பிற்கு முன்னால் அலுவலகத்தில் கூறுகிறார்கள்: கண்டிப்பாக இங்கு வந்து நகவெட்டியைக் கேட்பார். நான் உள்ளே செல்கிறேன். முஸாஃபா செய்யும் போது என் நகம் பட்டு விடக்கூடாது என்பதற்காக கேட்பார். எவ்வளவு பேர் இவ்வளவு நுட்பமான உணர்வுள்ளவர்களாக இருக்கிறார்கள். மற்றவர்கள் மீது அக்கறை செலுத்தி அதில் அவர் மகிழ்ச்சி அடைந்தார்.

அவர் கூறுகிறார்: சிறு வயதிலேயே நாங்கள் சாக்லேட் மற்றும் பிற பொருள்களைக் கொடுத்தால் ஒரு வாரத்திற்குரியதை வாங்கி வந்தால் இவர் கை பட்டதும் அதனை எடுத்து ஒரே நாளில் தனது சக மாணவர்களுக்கு பகிர்ந்தளித்து விடுவார். ஜாமிஆவில் படிக்கும் போதும் சரி, வெளியிலிருந்து வந்த வார இறுதி நாட்களில் வீட்டிற்கு செல்ல முடியாத சக மாணவர்கள் இருப்பார்கள். அவர்களுக்காக இவர் தமது தாயாரிடம் அல்லது சகோதரியிடம் என்னுடன் எனது நண்பர்களும் வருகிறார்கள். வீட்டில் உணவு உண்பார்கள். உணவை தயார் செய்யுங்கள் என்று கூறி விடுவார். ஹாஸ்டலுக்குப் போகும் போது உண்பதற்குரிய பண்டங்களை இதை வைத்துக் கொள் என்று கொடுத்தால், நிறைய இருந்தால் கொண்டு போவார். அதாவது எனது ரூம்மேட்டுகள் அனைவருக்கும் போதுமானதாக இருக்க வேண்டும் என்று கூறி விடுவார். மறைத்து மறைத்து உண்ண இயலாது என்று கூறி அதை வைத்து விட்டுப் போய் விடுவார். தனது நண்பர்களின் துணிகளையும் கூட வீட்டுக்கு எடுத்து வந்து இதனையும் துவைத்து ஸ்திரி போட்டுத் தருமாறு கேட்பார். சகோதர சகோதரிகளுடன் மிகவும் அன்புடன் பழகி வந்தார். மிகவும் பொறுப்புடன் சேவை செய்து வந்தார். தனக்காக கண்டிப்பாக கையை சுருக்கிக் கொள்வார். கருமி என்று கூற முடியாது. வீண் விரயம் செய்ய மாட்டார். ஆனால் மற்றவர்களுக்காக மிகவும் தாராளமாக செலவு செய்வார். வஸிய்யத்தும் செய்திருந்தார். நான் கூறியது போன்று அல்லாஹ்வின் அருளால் அது ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதும் கிலாஃபத்தின் மீதும் அளவற்ற நேசர் இருந்தது. கிலாஃபத்திற்கு எதிராக எந்தவொரு வார்த்தையையும் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார். பேச்சைக் கேட்டுக் கொண்டு அமைதியாக இருக்கவும் மாட்டார். எப்போதும் அதுபோன்ற பேச்சைக் கேட்டு விட்டால் முகம் சிவந்து விடும். மிகவும் பொறுமைசாலியாக இருந்தார். ஒருபோதும் எதையும் வேண்ட மாட்டார். எனவே, இவரது தேவைகளைக் குறித்து நாங்களே கவனத்தில் கொள்ள வேண்டியதிருந்தது. படிக்கும் போது பொதுவாக ஐரோப்பாவிற்கு வெளியிலிருந்து வருபவர்களுக்கு குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து வருபவர்கள் ஆங்கிலத் தேர்வுக்கு உதவி செய்வார்கள். சில பையன்களே எனக்கு எழுதியிருக்கிறார்கள். பெரும் சீனியர்கள் கூட ஆங்கிலத் தேர்வில் இவர் எங்களுக்கு உதவி செய்தார்; எங்களுக்கு கற்றுக் கொடுத்தார்; புரிய வைத்தார் என்று எழுதியிருக்கிறார்கள். கோபம் என்ற பெயர் கூட அவரது இயல்பில் இருந்ததில்லை. எப்போதும் புன்முறுவல் பூத்தவாறே இவரை அனைவரும் கண்டனர். இதனையும் எல்லாரும் எழுதியிருக்கிறார்கள். நல்ல தூய்மையான நகைச்சுவைகளை அவர் தானும் செய்வார். அவற்றை ரசிக்கவும் செய்து வந்தார். தொழுகையில் மிகவும் பேணுதலாக இருந்து வந்தார். வக்ஃபே நவ் திட்டத்தில் ஏற்கனவே அவர் இருந்து வந்தார்.

இவரது தந்தையார் கூறுகிறார்: வாழ்வை அர்ப்பணிக்கும் கவுரவத்தையும் அல்லாஹ் அவருக்கு வழங்கினான். எப்போதும் உண்மையை பேசியவாறு அதிகமாக உண்மையில் நிலைத்திருக்கின்ற பண்பில் தனது தகுதிக்கேற்ப பங்கு பெற்றார். முரப்பி ஆகி இயக்கத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்பது தனது நீண்ட கால விருப்பம் என்று கூறி வந்தார்.

என்னிடமும் கூறினார்: நானும் அவரிடம் இதனையே கூறினேன். இந்த மகன் ஜாமிஆவின் படிப்பை முடிக்கும் முன்பே முரப்பி ஆகி விட்டான். அவருக்கு தப்லீகிலும் தர்பிய்யத்திலும் எந்த அளவுக்கு ஆர்வம் இருந்தது என்பது பற்றிய சில சம்பவங்களைக் கூறுவேன். அவரது பயணத்தைப் பற்றி நான் கூறினேன். நல்ல உடல் நலத்திற்காகவே அப்பயணத்தை மேற்கொண்டார். அவரது அப்பயணத்தை ஒரு வகையில் மார்க்கப் பயணம் என்றே கூற வேண்டும். அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்திக் கொண்டேயிருப்பானாக! தமது நெருக்கமானவர் –களுக்கு அருகில் இடமளிப்பானாக!

இவரது தந்தையார் கூறுகிறார்: இவர் மான்செஸ்டருக்கு வக்ஃபே ஆர்ஸியில் (தற்காலிக அர்ப்பணிப்பில்) சென்றிருந்தார். அவர் ஊருக்குத் திரும்பும் நாளில் அவரது சட்டைப் பையில் ஒருவர் ஒரு கவரை வைத்தார். அவர் அதனை திறந்து பார்த்த போது அதில் சிறிது பணம் இருந்தது. ரிஸா நன்றி செலுத்தியவாறு திருப்பிக் கொடுத்து விட்டார். அங்கிள், நாங்கள் இதனை வாங்குவது தடுக்கப்பட்டதாகும் என்று அவரிடம் கூறினார். அதே மனிதர் சில நாட்களுக்குப் பிறகு எனக்கு கடிதமும் எழுதினார். ஒரு சிறு பையன் முரப்பி ஆகிக் கொண்டிருக்கிறான். அவன் இங்கு வந்தான். என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டான். அத்தகைய பையன்கள் முரப்பி ஆனார்கள் என்றால் நிச்சயமாக ஆன்மீக மாற்றம் ஏற்படும். ஏனெனில் இவ்வாறு அவருக்கு நாங்கள் தந்ததை அவர் வாங்க மறுத்து விட்டார் என்று எனக்கு அவர்கள் எழுதியிருந்தனர். மிகவும் உழைத்து தமது பணியைச் செய்தார்.

அவரது தாயார் கூறுகிறார்: எனது மகன் தனது பெற்றோருக்கும் ஜமாஅத்திற்கும் கட்டுப்படக்கூடியவனாக இருந்தான். என்னுடன் அன்பான தொடர்பிருந்தது. ஒவ்வொரு பையனும் தனது பெற்றோரை நேசிக்கின்றார்கள் என்றாலும் அவரது அன்பின் தரம் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. கவனத்தில் கொள்பவர், சொல்லை ஏற்பவர், சிறு விஷயத்திலும் நல்ல முறையில் பேசுபவர், சிறுவருடனும் பெரியவருடனும் அன்புடன் நடப்பவர், வீட்டில் இருக்கும் போது வீட்டு வேலைகளில் உதவி செய்வார். சிறிது நேரத்திற்கு ஒருமுறை சோர்ந்து போய் விட்டீர்களா? உதவி செய்ய வேண்டுமா? என்று கேட்பார். என்னை ஒருபோதும் கஷ்டமான நிலையில் பார்க்க முடியாதவராக இருந்தார். எனது கண்களில் கண்ணீர் வர நாம் பார்க்கக் கூடாது என்று கூறுவார். ஜாமிஆவிலிருந்து வீட்டுக்கு வரும்போது வீட்டிலுள்ள எல்லாரையும் விசாரிப்பார். அந்த வாரம் முழுவதும் எப்படியிருந்தார்கள் என்றும் எல்லாரையும் மிகவும் கவலையுடன் விசாரிப்பார். சிறுவராக இருந்தாலும் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் இஸ்லாமாபாத் போகும்போது பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததுமே ஓடிப் போய் விடுவார். நான் ஹுஸூரை சந்திக்கப் போகிறேன். அத்துடன் நடைபயணமும் போக வேண்டும் என்று கூறுவார்.

ரப்வாவின் டாக்டர் நுஸ்ரத் ஜஹான் சாஹிபா தற்போது இங்கு நோயுற்றிருக்கிறாள்கள். அல்லாஹ் அவர்களுக்கும் உடல் நலம் வழங்குவானாக! அவர்களது வீட்டுடன் இவருக்கு நல்ல தொடர்பிருந்தது. நான் அவர்களுக்காக நிறைய துஆ செய்கிறேன் என்று கூறி வந்தார். அல்லாஹ் அவர்களுக்கு உடல்நலம் வழங்குவானாக! அல்லாஹ் அவர்களுக்காக இவர் செய்த துஆவையும் ஒப்புக் கொள்வானாக!

அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஜுமுஆ அன்று இரவு கனவில் பார்த்தேன். எனது வீட்டிற்கு நிறைய ஆட்கள் வருகிறார்கள். நிறைய நிழற்படங்கள் எடுக்கின்றனர். நான் பயந்து எழுதுகிறேன். நான் கனவு கண்டேன். நான் பயந்து விட்டேன் என்று எனது கணவரிடம் கூறினேன். இந்தக் கனவு நல்ல தாக்கத்தைக் கொண்டதல்ல. சதகா கொடுங்கள் என்று அவரிடம் கூறினேன். நான் அலுவலகத்திற்குச் சென்று சதகா கொடுக்கிறேன் என்று அவர் கூறினார். ஆனால், அதற்கு முன்பே அந்த பரிதாபத்திற்குரிய செய்தி வந்து விட்டது.

அவரது தாயார் கூறுகிறார்: எப்போதும் எந்தவொரு ஆடையைக் கொண்டு கொடுத்தாலும் அமைதியாகப் போட்டுக் கொள்வார்; பாராட்டுவார். விருந்தோம்பலில் மிகவும் உயரிய நிலையில் இருந்தார். ஒருமுறை ஒருவர் விருந்திற்கு அழைத்தால் அவரை மறக்கவே மாட்டார். அவர்களை எப்போது அவர் சந்தித்தாலும் அல்லது அவர்கள் இஸ்லாமாபாத்திற்கு வந்தால் இன்னின்ன நபர் வந்துள்ளார். அவர்களுக்காக உணவு தயார் செய்யுங்கள். உணவு உண்பதற்காக அழைப்பு விடுங்கள் என்று கூறுவார்.

பிறகு கூறுகிறார்: தனது டிரிப்பிற்கு போகும் முன் எனக்கு போன் மூலம் உருது எழுதக் கற்றுக் கொடுத்து வந்தார். நீங்கள் சகோதர சகோதரிகளை நலம் விசாரிப்பது எப்படி என்று உருதுவில் எழுதுங்கள். நான் பதில் தருவேன் என்பார். நான் எப்போது அறிவுரை கூறினாலும் செயல்படுவதற்கு முயற்சி செய்வார்.

நண்பர்கள் இதனையே கூறுகின்றனர்: கிலாஃபத்துடன் தொடர்பு வைத்திருந்தார். ஜமாஅத் அமைப்பின் ஒவ்வொரு சிறிய கட்டளையின்படியும் செயல்பட முயற்சி செய்வார்.

ஒருமுறை அவர் தன்னிடம் கூறியதாக இவரது தாயார் கூறுகிறார்: அம்மா நான் எத்தகைய முரப்பியாக விரும்புகிறேன் என்றால் எவ்வளவு சிறந்த தொண்டினை ஜமாஅத்திற்கு செய்ய விரும்புகின்றேன் என்றால் நான் எத்தனை அஹ்மதிகளை உருவாக்கினேன் என்பதைப் பார்த்து நீங்கள் பெருமைப்பட வேண்டும்.

அவரது சகோதரி ரஃபியா சாஹிபா கூறுகிறார்: மிக மிக அன்பிற்குரிய சகோதரனாக இருந்தார். சிறுவர் என்றாலும் அவரது சிந்தனை மிகவும் ஆழமானதாக இருந்தது. சிறிய வயதாக இருந்தும் எல்லாவற்றையும் கவனத்தில் கொள்பவரும் எல்லா வயதினருடனும் அவர்களது வயதிற்கேற்ப பேசுபவருமாக இருந்தார். இன்று வரை யாருடைய உள்ளத்தையும் துக்கமடையச் செய்ததில்லை. ஒவ்வொரு வார்த்தையையும் நிதானமாகக் கேட்பார். அதற்கு கண்ணியத்துடன் பதிலளிப்பார். இஸ்லாமாபாத்தில் பணி செய்வதற்காக ஊழியர்கள் அங்கு சென்றனர். முதலில் மராமத்துப் பணிகள் நடந்தன அல்லது லஜ்னா ஹால் கட்டப்பட்டது. அவர்களை கவனத்தில் கொள்வது, தேநீர் கொண்டு சேர்ப்பது அல்லது மற்ற உணவு பானங்களை வழங்குவது போன்ற பணிகளை எப்போதும் செய்து வந்தார். இந்த பையன் மட்டும்தான் எங்களை விசாரிக்கின்றார் என்று அம்மக்கள் கூறி வந்தனர்.

இவரது சகோதரர் அஸத் சலீம் கூறுகிறார்: மிகவும் எளிமையான குணமுடையவர். மிகவும் நேரிய பேச்சைப் பேசுபவர். தற்போதுதான் சகோதரருக்காக ஒரு புதிய காரை வாங்கினேன். அவருக்கு Surprise கொடுத்தேன். இரண்டு சகோதரர்களும் நல்ல வேலை பார்க்கின்றனர். முதலில் இவர் அந்தக் காரின் விலையை விசாரித்தார். பிறகு, நான் ஒரு முரப்பி என்ற முறையில் எளிய வாழ்க்கை தான் வாழ வேண்டும். விலை உயர்ந்த பொருள் வாங்கக் கூடாது என்று கூறினார்.

இவரது சகோதரி அமத்துல் ஹஃபீஸ் சாஹிபா எழுதுகிறார்: இவரது சிறப்புகளில் ஒன்று, இவர் எவரது தவறைப் பற்றியும் கேட்க விரும்ப மாட்டார். மக்களின் எதிர்மறை கருத்துக்களையும் கூட நல்ல முறையில் மாற்றி விடுவார். நாம் மக்களின் நல்ல அம்சத்தை மட்டும் பார்க்க வேண்டும் என்பது அவரது கூற்றின் நோக்கமாக இருந்து வந்தது. அவரது தீமைகளைப் பற்றி பேசுவதற்கு பதிலாக அவருக்காக துஆ செய்ய வேண்டும் என்று கூறி வந்தார். இவரது இயல்பின் எளிமைக்கு இது ஓர் உதாரணமாகும். தாயார் பெருநாளுக்காக புதிய ஆடையை வாங்கித் தரும்போது மிகவும் கவலைப்பட்டு வந்தார். இந்த ஆடை தேவைக்கு அதிகமான பகட்டும் காட்டுதலும் உடையதாக ஆகி விடக் கூடாதே என்று நினைத்தார். எனவே தனது பழைய ஜாக்கெட் போன்றவற்றை அந்த ஆடைக்கு மேல் அணிந்து கொள்வார்.

ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஆசிரியர் குத்தூஸ் சாஹிப் அவரும் உடன் இருந்தார். அவர் கூறுகிறார்: சிறு வயதிலிருந்து அவரை (ரிஸா சலீமை) நான் அறிவேன். ஜாமிஆவில் அவர் சேரும்போது நான் ஷாஹித் வகுப்பில் இருந்தேன். இந்த அடிப்படையில் அவருடன் ஜாமிஆவில் ஒரு வருடம் செலவிட்டேன். ஆனால் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தர்பிய்யத் வகுப்புகள், இஜ்திமா மற்றும் ஆண்டு மாநாடுகள் ஆகியவற்றில் ஒன்றாக அவருடன் டியூட்டி கொடுக்கும் வாய்ப்பு கிடைத்தது.

சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யா கூறுகிறார்: குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமாவின் போது மாணவர்களுடன் கேள்வி பதில்களிலும் அவர்களை பராமரிப்பதிலும் நல்ல பணி செய்து வந்தார். ரஸா சலீமின் டியூட்டி சுகாதாரத் துறையில் வழங்கப்பட்டிருந்ததாக குத்தூஸ் சாஹிப் எழுதுகிறார். இங்கு ஹைஜின் என்று சொல்லப்படுகிறது. அதன் அசல் வேலை துப்புரவுப் பணியாகும். எனக்கு


**சுத்தமான தேன் கிடைக்கும்**

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**

B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)

Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)


**A. பஷீர் அஹ்மது**

வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

ஏன் இங்கு டியூட்டி தரப்பட்டது என்ற ஒருபோதும் அவர் கேட்டதில்லை. மாறாக, மிகவும் உழைத்தும், கவனத்துடனும் நிரந்தரத் தன்மையுடனும் பணி செய்தார்.

அவர் கூறுகிறார்: எனக்கு ஜாமிஆவில் கற்பிக்கவும் வாய்ப்பு கிடைத்தது. மிகவும் தகுதி வாய்ந்த மாணவராக இருந்தார். வகுப்பில் முன் பக்கத்தில் அமர்வார். எப்போதும் புன்சிரிப்புடன் பேசுவார். அவர் எந்தவொரு கோபமும் பட்டதாக எனக்கு நினைவில்லை. எப்போதும் பிறருக்கு உதவி செய்வதற்கு முயற்சி செய்து வந்தார். கிரிக்கெட்டில் நல்ல ஆர்வம் இருந்தது. ஆனால் ஸ்கோர் பார்க்க வேண்டும் என்று விரும்பினால் எப்போதும் ஆசிரியரிடம் கேட்டு விட்டுதான் செல்வார்.

அவர்கள் கூறுகிறார்கள்: இந்த Hiking –ன்போது ஒருமுறை குடிசையில் தங்கியிருந்த போது உளூ செய்யும் இடத்தில் பூட்டு இருக்கவில்லை. எல்லாரும் இவரை வாசலில் நிற்குமாறு கூறிவிட்டுச் செல்வர். மகிழ்ச்சியுடன் அப்பணியைச் செய்தார். யாருக்காவது இரவில் போக வேண்டியதிருந்தால் அப்போதும் கூட என்னை கண்டிப்பாக எழுப்பலாம் என்றார். Hiking –ன்போது வகுப்புத் தோழர் ஜாஃபருடன் Hiking –ற்குப் பிறகு குரோஷியா போவதாக இருந்தது. ஆனால் அங்கு ஜாஃபர் கண்ணில் காயம் ஏற்பட்டிருந்தது. மீண்டும் மீண்டும் தனது கவலையை வெளிப்படுத்தி வந்தார். கீழே இறங்கியதும் மருத்துவமனை சென்று உனக்கு பரிசோதனை செய்து விடுவோம் என்று கூறி வந்தார். எழுதுகிறார்: ரிஸா சலீம் மிகவும் களங்கமற்ற வாகீஃபே ஸிந்தகீ (வாழ்வை அர்ப்பணித்தவர்) ஆவார். கடின உழைப்பு, நன்னடத்தை, ஒவ்வொருவருடனும் இனிமையுடன் பழகுதல் போன்றவை இவரது பண்புகளாக இருந்தது.

அதேபோன்று ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஆசிரியர் ஷஹீர் கான் சாஹிப் கூறுகிறார்: கடந்த இரண்டு வருடமாக ரிஸா சலீமுக்கு பாடம் நடத்தும் வாய்ப்பை பெற்று வந்தேன். மிகவும் எளியவர். இந்தப் பையனிடம் கண்ட தனிச்சிறப்பு என்னவென்றால் எந்த பொறுப்பை கொடுத்தாலும் மிகவும் உழைப்புடனும் பிடிப்புடனும் செய்தார். சில நேரங்களில் பார்த்துள்ளேன். ஒரு வேலையில் நியமிக்கப்பட்ட மற்ற பையன்கள் அங்குமிங்கும் போய் விட்டாலும் கூட இவர் தானே அந்த வேலையைச் செய்து முடிப்பவராக இருந்தார். அப்பணி முடியும் பரை தனது முழு கவனத்தையும் அதில் செலுத்தி வந்தார்.

ரிஸா சலீம் உடைய மிகவும் பிடித்த ஒரு பழக்கமாவது தேவையில்லாத கேள்வி கேட்கமாட்டார். எப்போது கேள்வி கேட்டாலும் மேற்கத்திய உலகில் இஸ்லாம் அஹ்மதிய்யத்திற்கு எதிராக செய்யப்படுகின்ற ஆட்சேபனைகளை அடிப்படையாகக் கொண்டவையாக அவை இருக்கும். சில நேரங்களில் கூறுவார். ஒரு முஸ்லிம் அல்லாதவர் அல்லது அஹ்மதி அல்லாதவரிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர் இந்த கேள்வியை கேட்டார் என்று கூறுவார். அவரது உள்ளத்தில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தற்காப்பு, அதன் மீது செய்யப்படும் ஆட்சேபனைகளுக்குப் பதில் தருவதற்காக அல்லாஹ் ஓர் எழுச்சிமிகு ஆர்வத்தை வைத்திருந்தது போன்று இருந்தது. ரிஸா ஒருமுறை வண்டியில் என்னிடம் லிஃப்ட் கேட்டிருந்தார். இருமுறை அவரிடமிருந்த USB Stick சட்டைப் பையிலிருந்து வண்டிக்குள் விழுந்தது. இந்த Stick ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது நூல்களின் Audio Recording அடங்கியதாக இருந்தது. வீணான விஷயங்களை கொண்டதாக அது இருக்கவில்லை.

அதுபோன்று இவரது ஓர் ஆசிரியர் செய்யது மஸ்ஹூது அஹ்மது எழுதுகிறார்: டியூட்டோரியல் பிரிவில் இணைந்திருந்தார். அறிவு மற்றும் உடற்பயிற்சி போட்டிகளில் சுறுசுறுப்புடன் பங்கு பெற்றார். அவருடைய பொது அறிவு மற்றவர்களுடன் ஒப்பிடும் போது மிகவும் நன்றாக இருந்தது. அதுபோன்று கூறுகிறார்கள்: கடந்த வருடம் பைத் பாஸி போட்டியில் கலந்து கொள்வதற்காக இவர் 500 கவிதை வரிகளை மனனம் செய்து வைத்திருந்தார். அவரது இந்த சிறப்பு மிகவும் தெளிவாக இருந்தது. அதாவது, இவர் கவிதைகளை அப்படியே மனப்பாடம் செய்யாமல் கருத்துக்களை புரிந்து மனனம் செய்வார். இதற்காக சீனியர் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டுதலைப் பெறுபவராக இருந்தார்.

அவர் கூறுகிறார்: ரிஸா சலீமுக்கு தப்லீகில் நல்ல ஆர்வம் இருந்தது. கடந்த வருடம் இவர் வக்ஃபே ஆர்ஸியில் உல்வர்ஹேம்டன் ஜமாஅத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு இவர் பிரசுரங்கள் விநியோகம் செய்ததுடன் உள்ளூர் ஜமாஅத் சகோதரர்களை சந்தித்து பல ஜமாஅத் புக் ஸ்டால்களை போடச் செய்தார். இவ்வகையில் ஒரு ஆங்கிலேயரை சந்தித்தார். அவர் மார்க்க ரீதியில் நல்ல துடிப்புள்ள கிறித்தவராக இருந்தார். இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஆய்வின் ஒளியில் ஹஸ்ரத் ஈஸா (அலை) சிலுவையில் இருந்து விடுதலை பெற்று காஷ்மீரை நோக்கி இடம் பெயர்ந்ததைக் கூறினார். அவர் மிகவும் வியந்தார். அவரை பள்ளிவாயிலுக்கும் அழைத்து வந்தார். அதற்குப் பிறகும் கூட அவருடன் தொடர்பு கொண்டார்.

இதுபோன்று இஸ்லாமாபாத் ஜாமிஆ அஹ்மதிய்யாவுடன் சேர்ந்து பிரசுரங்கள் விநியோகம் செய்யவும் ஸ்டால்கள் அமைக்கவும் எப்போதும் தயாராக இருந்தார். கடந்த வருடம் இவரது வகுப்பின் மாணவர்கள் அல்லது ஜாமிஆ மாணவர்கள் கோடைக் காலத்தில் ஸ்பெயினுக்குச் சென்றார்கள். அங்கு குறைந்தது 50 ஆயிரம் பிரசுரங்கள் விநியோகம் செய்து விட்டே வர வேண்டும் என்று நான் கூறினேன். அல்லாஹ்வின் அருளால் அந்த குழு அங்கு 50 ஆயிரத்து ஐநூறு பிரசுரங்கள் விநியோகம் செய்து விட்டு வந்தன.

அதேபோன்று ஜாமிஆவின் ஆசிரியர் மன்சூர் ஸியா சாஹிப் எழுதுகிறார்: மிகவும் எளிமையான இயல்பு கொண்ட மாணவராக இருந்தார். இவரது முகத்தில் ஒருபோதும் கோபத்தின் அறிகுறியைக் கண்டதில்லை. கிலாஃபத் மற்றும் ஜமாஅத் கொள்கைகள் மீது உண்மையில்லாத ஆட்சேபனைகளை எவராவது எப்போது கூறினாலும் அந்த சந்தர்ப்பத்தில் இவரது முகத்தில் கடும் கோபத்தைக் கண்டுள்ளேன். இது இந்த பையனுடைய உள்ளத்தில் கிலாஃபத் மீது ஆழ்ந்த அன்பு இருக்கிறது என்பதற்கும் அது உள்ளத்தில் நிறைந்து காணப்படுகிறது என்பதற்கும் தெளிவான ஆதாரமாக இருந்தது. அவருக்கு கிலாஃபத்துடன் இருந்த தொடர்புக்கு மார்க்க அறிவைத் தேடுவது ஓர் உதாரணமாக இருந்தது. வகுப்பில் எனது குத்பாவைப் பற்றி குறிப்பிட்டால், ஆய்வு செய்தால் இவருக்கு குத்பா சம்பந்தமாக பல விஷயங்கள் நினைவில் இருந்தன. குத்பாவை கவனத்துடன் கேட்பவராக இருந்தார்.

இவற்றையெல்லாம் எழுதுபவர் எழுதுகிறார்: இவருக்கு தப்லீகில் நல்ல ஆர்வம் இருந்தது. Social Media –க்களில் தப்லீக் செய்வது இவரது வழக்கமாக இருந்தது. கண்ணியத்திற்குரிய ஆசிரியர்களிடம் கேட்டு மிகவும் உழைத்து அஹ்மதிய்யத்தின் மீதுள்ள ஆட்சேபனைக்கு எதிரான ஆதாரப்பூர்வமான பதிலை தயார் செய்வார்.

பிறகு இவருடன் படித்த ஸபீர் அஹ்மது எழுதுகிறார்: நான் பெல்ஜியத்தைச் சார்ந்தவன். நான் வார இறுதியில் வீட்டிற்குச் செல்ல மாட்டேன் என்பது அவருக்கு தெரியும். வார இறுதியில் வீட்டிற்குச் செல்லும்போது வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவுகளை தருவதற்காக தன்னுடன் என்னை அழைத்துச் செல்வார். அதேபோன்று ஆங்கிலத்தில் நான் பலவீனமாக இருந்தேன். எப்போதும் எனக்கு ஆங்கிலத்தைப் புரிய வைத்து ஆங்கிலத் தேர்வுக்காக தயார் செய்ய வைத்தார். இதேபோன்று மற்றொரு மாணவர் கூறுகிறார்: மிகவும் மென்மையான இயல்பும் இனிய சுபாவமும் கொண்டவர். எப்போதும் மற்றவருக்கு உதவி செய்ய தயாராக இருந்தார்.

கூறுகிறார்: நாங்கள் வக்ஃபே ஆர்ஸிக்காக போகும் போது கடை வீதியில் தப்லீக் ஸ்டால் போட்டோம். இரண்டு கிறித்தவர்கள் வந்தனர். ரிஸா மிகவும் அழகிய முறையில் அவர்களுக்கு தப்லீக் செய்தார். மர்ஹூம் உடைய அறிவு மிகவும் பரந்ததாக இருந்தது. தப்லீக் செய்வதில் மிகுந்த ஆர்வம் காணப்பட்டது. ஒருபோதும் கோபப்பட்டு பேச மாட்டார். பையன்களை ஒன்று கூட்டி மற்ற மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சிகளை உருவாக்குவார்.

கூறுகிறார்: எனக்கு ஒரு சம்பவம் நினைவில் உள்ளது. 2014 ஆம் ஆண்டு வக்ஃபே ஆர்ஸியின்போது நானும் ரிஸா சலீம் மர்ஹூமும் தப்லீக் ஸ்டால் போட்டோம். போவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு Britain First –ஐச் சார்ந்தவர்கள் வந்தனர். இவர்கள் இஸ்லாத்திற்கு எதிரானவர்கள். அவர்கள் பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்தனர். எங்களை அடைந்ததும் ரிஸா சலீமிடம் கோபத்துடன் கேள்வி கேட்டனர். அவர் மிகவும் சகிப்புத் தன்மையுடனும் மென்மையுடனும் பதில் கூறினார்கள். இறுதியில் அவர்கள், இவர்கள் தீவிரவாத முஸ்லிம்கள் இல்லையென்று தெரிந்து கொண்டனர்.

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

ஜலாலுத்தீன்
ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.
Ph : +91 98409 17179

O.A.N. DOORS & STEELS
O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்
*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*
Ambai Road, (Opp. Karuna Clinic), Kulavanikarpuram, Tirunelveli - 627 005
O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

இதுபோன்று ஜாமிஆவில் படிக்கிற ஸாஃபர் கூறுகிறார்: இவருடன் வகுப்பறையில் அமர்ந்திருந்தேன். திடீரென்று இவர் போர்டு மார்க்கரை கையில் எடுத்தவாறு கூறினார். ஸாஃபர் நாம் ஜாமிஆவில் நிறைய நேரத்தை வீணாக்குகிறோம். Time Table எழுத ஆரம்பித்தார். அதில் Free ஆன நேரத்தை Highlight செய்தவாறு கூறினார். இதில் கூட நாம் ஏதாவது செய்ய வேண்டும்.

இதேபோன்று ஆசிரியருடன் அமர்ந்து பள்ளி நேரம் முடிந்த பின்பும் பல்வேறு Subjects படிக்க விரும்பினார். நான் ஏற்கனவே கூறிய அந்த பையன் கண்ணில் காயமடைந்தார் என்று கூறினேன். அவர் கூறுகிறார்: எனக்கு சிறிது காயம் ஏற்பட்டிருந்தது. கடைசி வரை ஸாஃபர் நாம் கீழே சென்றடைந்ததும் மருத்துவமனை செல்ல வேண்டும். சரியான சிகிச்சை செய்ய வேண்டும் என்று ரிஸா சலீம் கூறி வந்தார். விபத்திற்கு முன்னர் மலையிலிருந்து இறங்கும்போது சிலவேளை எனது கால்கள் வழுக்கி விட்டால் அதாவது ஸாஃபருடைய கால்கள் வழுக்கிக் கொண்டிருந்தது. அது அவருக்கு பெரும் கவலையளித்தது. கவனமாக நடந்து செல்லுமாறு அறிவுரை கூறினார்.

அதேபோன்று சென்ற வருடம் Hiking –ன் போது உயரத்தில் சென்றதால் சுகவீனம் ஏற்பட்டது. அதற்கு Altitude Sickness என்று பெயர். அப்போது மீண்டும் மீண்டும் எனக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார். எப்படியிருக்கிறது என்று கேட்டுக் கொண்டிருந்தார். ஆனால் தக்தீரின் விருப்பம் வேறொன்றாக இருந்தது என்பது தெரியாது. பிறகு வார இறுதியில் திரும்பி வரும்போது ஜமாஅத்தின் மீது சொல்லப்படும் ஆட்சேபனைகளை நினைவில் வைத்துக் கொண்டு வருவார். ஆசிரியர்களிடம் அதற்கு பதில் கேட்பார்.

அதேபோன்று இன்னொரு ஜாமிஆ அஹ்மதிய்யா மாணவர் ஹாபிஸ் தாஹா கூறுகிறார்: கிலாஃபத்தின் மீது அர்ப்பணிப்பு மனப்பான்மை கொண்டவர். காலத்தின் கலீஃபாவின் மீது அளவற்ற நேசம் கொண்டவர். காலத்தின் கலீஃபாவிற்கு எதிராக எவரும் பேசுவதை சகித்துக் கொள்ள மாட்டார். ஒருமுறை ஜமாஅத்தை விட்டு தூரம் சென்று விட்ட ஒருவர் ஜமாஅத்தைப் பற்றி ஒரு தவறான வார்த்தையைக் கூறிய போது ரிஸா கூறினார். உமது எல்லா பேச்சையும் என்னால் சகித்துக் கொள்ள முடியும். ஆனால் கிலாஃபத்தைப் பற்றி அல்லது கிலாஃபத்திற்கு எதிரான ஒரு பேச்சை என்னால் சகித்துக் கொள்ள இயலாது.

பிறகு ஒரு மாணவர் தானியால் எழுதுகிறார்: Hiking சென்ற வருடம் நடந்தது. அதற்குப் பிறகு நாங்கள் ஹாபிஸ் இஜாஸ் இடம் Hiking –ற்காக பாடம் கற்றுக் கொண்டிருந்தோம். Hiking போவதில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். எல்லாரும் சேர்ந்து போன்களில் வீடியோ எடுத்து அனுப்பிக் கொண்டிருந்தோம். எப்போதும் எம்மை மகிழ்ச்சியுடன் வைத்திருக்க முயன்றார். நேரம் வீணாகக் கூடாது என்று நினைப்பவராக இருந்தார். ஒவ்வொரு வாரமும் ஒரு புதிய நூலை படித்துக் கொண்டிருப்பார். தஹஜ்ஜுத் தொழுவதற்கு முயற்சி செய்து வந்தார். நான் தூங்கிக் கொண்டிருந்தால் கடுமையுடன் தன்னை விழிக்கச் செய்யுமாறு நண்பர்களிடம் கூறுவார்.

ஜாமிஆவின் படிப்புடன் உலகியல் அறிவைப் பெறுவதில் ஆர்வம் இருந்தது. பொது அறிவு மற்றும் கவிதைகளில் நல்ல ஆர்வம் இருந்தது. அதில் பங்கெடுத்தார். சுருக்கமாக மக்கள் எண்ணற்ற சம்பவங்களை கூறுகின்றனர். அல்லாஹ் மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக! தனது அன்பிற்குரியவர்களின் பாதங்களில் இடமளிப்பானாக! இந்த பையன் நான் முதலில் கூறியது போன்று ஜாமிஆவிலிருந்து தேர்ச்சி பெறுவதற்கு முன்பே சிறந்த முரப்பியாகவும் முபல்லிக்காகவும் இருந்தார். கிலாஃபத்தின் மீது எல்லையற்ற தன்மான உணர்வு கொண்டவராக இருந்தார். அல்லாஹ் உலகிலுள்ள எல்லா ஜாமிஆ மாணவர்களுக்கும் இந்த வாய்ப்பினை வழங்குவானாக! அவர்களும் கலப்பற்ற தூய்மை மற்றும் பற்றில் முன்னேறுவார்களாக! தமது கடமைகளை நிறைவேற்றுவார்களாக! இவரது நண்பர்கள் இவரது சிறப்பை மட்டும் கூறினால் போதாது. நட்பின் உரிமையாவது அவரது சிறப்புகளை தம்முடையதாக ஆக்கியவாறு தமது எல்லா திறனையும் மார்க்கப் பணிக்காக பயன்படுத்த வேண்டும். எனக்கும், வரக்கூடிய கலீஃபாக்களுக்கும் எப்போதும் மிகச் சிறந்த சுல்தானே நஸீர் (வலிமையான உதவியாளர்கள்) கிடைத்துக் கொண்டிருப்பார்களாக!

அல்லாஹ் பெற்றோருக்கும் சகோதர சகோதரிகளுக்கும் மன நிம்மதியை வழங்குவானாக! இறைவனது திருப்தியில் திருப்தி அடைந்தவாறு இம்மக்கள் இந்தப் பொறுமையை காட்டியிருக்கிறார்கள். அதில் அவர்கள் எப்போதும் நிலைநிற்பார்களாக! அல்லாஹ்வின் அருளுக்கு எப்போதும் வாரிசாவார்களாக! வருங்காலத்தில் ஒவ்வொரு சோதனையிலிருந்தும் பிரச்சனையிலிருந்தும் அல்லாஹ் அவர்களை பாதுகாப்பானாக!

தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் இவரது ஜனாஸா ஹாஸிர் தொழுகை நடைபெறும். நான் வெளியில் சென்று ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். நீங்கள் இங்கேயே ஸஃப்களை சரி செய்யுங்கள்.

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

என்னை பொய்ப்படுத்துவதிலிருந்து அவர்கள் விலகவில்லை. நான் இட்டுக்கட்டி பொய் கூறுபவனாக இல்லாமல் நம்பிக்கை கொண்டவனாக இருந்தால் இந்நிலையில் அவர்கள் என்னை பொய்ப்படுத்தி என்னை காஃபிர் என்று கூறியதால் அவர்கள் காஃபிர் ஆகி விட்டனர். என்னை காஃபிர் என்று கூறி அவர்கள் தமது குஃப்ரில் முத்திரை பதித்து விட்டனர். இது ஷரீஅத்திலுள்ள ஒரு விஷயமாகும். அதாவது, நம்பிக்கை கொண்டவரை காஃபிர் என்று கூறுபவர் காஃபிராகி விடுகின்றார். பிறகு ஏறக்குறைய 200 மவ்லவிமார்கள் என்னை காஃபிர் என்று கூறியுள்ளனர். எனக்க எதிராக நான் காஃபிராகி விட்டேன் என்று ஃபத்வா எழுதப்பட்டுள்ளது. அதாவது நம்பிக்கை கொண்டவரை காஃபிர் என்று கூறுபவர் காஃபிராகி விடுகின்றார். காஃபிரை ஒருவர் நம்பிக்கை கொண்டவர் என்று கூறினாலும் அவ்வாறு கூறுபவரும் காஃபிராகி விடுகின்றார் என்பது இவர்கள் கொடுத்துள்ள மார்க்கத் தீர்ப்பிலிருந்தே நிரூபிக்கப்பட்ட விஷயமாகும். இப்போது இந்த விஷயத்திற்கு எளிதான சிகிச்சை என்னவென்றால் மற்ற மக்களிடம் நேர்மையின் விதையும் ஈமானும் இருந்து அவர்கள் நயவஞ்சகர்களாக இல்லாமல் இருந்தால் அவர்கள் இந்த மவ்லவிமார்கள் தொடர்பாக ஒவ்வொரு மவ்லவியின் பெயரையும் தெளிவாகக் குறிப்பிட்டவாறு இவர்கள் அனைவரும் காஃபிர்கள் ஆவர். ஏனென்றால், இவர்கள் ஒரு முஸ்லிமை காஃபிராக்கி விட்டனர் என்று எழுதி ஒரு நீளமான பிரசுரத்தை வெளியிட வேண்டும். அப்போது நான் அவர்களை முஸ்லிம்கள் என்று கருதுவேன். நிபந்தனை என்னவென்றால், அவர்கள் நயவஞ்சகர்கள் என்ற சந்தேகம் இருக்கக் கூடாது. இறைவனின் தெளிவான அற்புதங்களை பொய்ப்படுத்துபவர்களாக அவர்கள் இருக்கக் கூடாது. அது அல்லாமல் அல்லாஹ், اِنَّ الۡمُنٰفِقِیۡنَ فِی الدَّرۡکِ الۡاَسۡفَلِ مِنَ النَّارِ நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரக ஆழத்தின் அடிமட்டத்தில் போடப்படுவர் என்று கூறுகின்றான். ***(4:146)*** நபிமொழியிலும் கூட مازنازانٍ وھو مؤمن وما سرق سارق وھو مؤمن அதாவது, எந்த விபச்சாரம் செய்பவரும், விபச்சாரம் செய்யும் நிலைமையிலும், திருடன் திருடுகின்ற நிலைமையிலும் நம்பிக்கை கொண்டவராக இருப்பதில்லை[2] என்று வந்துள்ளது. ஒருவரை காஃபிர் என்று கூறுவதால் மனிதன் சுயமே காஃபிராகி விடுகின்றான் என்பது சரியான விஷயமல்ல என்றால் பிறகு இது தொடர்பாக உங்களது மவ்லவிமார்களின் ஃபத்வாவை எனக்கு காட்டுங்கள். நான் அதை ஏற்றுக் கொள்வேன். காஃபிர் ஆகிவிடுகின்றான் என்றால் பிறகு மவ்லவியின் குஃப்ர் தொடர்பாக ஒவ்வொருவரது பெயரிலும் ஒரு பிரசுரத்தை வெளியிடுங்கள். அதற்குப் பிறகு அவர்களது இஸ்லாம் தொடர்பாக நான் சந்தேகப்படுவது ஹராம் ஆகும். நிபந்தனை என்னவென்றால், நயவஞ்சகத்தின் எந்தவொரு வாழ்க்கையும் அவர்களிடம் இருக்கக் கூடாது.[3]

---

[1]ழாலிம் (அநீதியிழைப்பவர்) என்பதன் கருத்து இந்த இடத்தில் காஃபிர் ஆகும். இதற்கான சான்று என்னவென்றால், இட்டுக்கட்டி பொய் கூறுபவருக்கு எதிரில் பொய்ப்படுத்துபவர் அல்லாஹ்வின் வேதத்தை அநீதியிழைக்கக் கூடியதாகக் கருதுகின்றார். மேலும் சந்தேகமின்றி எந்த நபர் இறைவனது வசனத்தை பொய்ப்படுத்துகின்றாரோ அவர் காஃபிராவார். எவர் என்னை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர் என்னை இட்டுக்கட்டி பொய் கூறுபவன் என்று கூறுவதன் மூலம் என்னை காஃபிராக்கி விடுகின்றார். எனவே, என்னை காஃபிர் என்று கூறியதன் காரணமாக அவர் சுயமே காஃபிராகி விடுகின்றார்.

[2]சஹீஹ் புகாரியில் இதே பொருளைத் தருகின்ற ஓர் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

لایزنی الزانی حین یزنی وھو مؤمن ولا یسرق حین یسرق وھو مؤمن

[3]நான் ஏற்கனவே கூறியது போன்றே காஃபிரை நம்பிக்கை கொண்டவர் என்று கூறுவதனாலும் மனிதன் காஃபிராகி விடுகின்றான். ஏனென்றால், எவர் உண்மையிலேயே காஃபிராக இருக்கின்றாரோ அவர் அவரது குஃப்ரை மறுக்கின்றார். எந்த அளவு மக்கள் என் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருக்கின்றனரோ அவர்கள், எல்லாருமே என்னை காஃபிர் என்று கூறுகின்ற அந்த எல்லா மக்களையும் நம்பிக்கை கொண்டவர்கள் என்று கருதுகின்றனர். எனவே, நான் இப்போதும் கிப்லாவை சார்ந்திருப்பவர்களை காஃபிர்கள் என்று கூறுவதில்லை. ஆனால், எவர்களிடம் சுயமே அவர்களின் கைகளினாலேயே குஃப்ரிற்கான காரணம் உருவாகி விட்டதோ அவர்களை எவ்வாறு நம்பிக்கை கொண்டவர்கள் என்று என்னால் கூற முடியும்?

***(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 167-169)***

# பொதுத் தொண்டு மற்றும் மக்களுக்கு பயன் தரக்கூடிய செயல்களைச் செய்வதே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பணியாகும்

- உங்களது வாழ்வின் நோக்கம் நம்மை படைத்த அந்த அல்லாஹ்வை வணங்குவதாகும். இரண்டாவது நோக்கம், அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு தொண்டு செய்வதாகும் என்பதை உலகிற்கு கூறுவதுதான் நமது நோக்கமாகும். இஸ்லாத்தின் போதனைகளின் சுருக்கமும் இதுவேயாகும்.
- இங்கிருந்து அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் கலப்பற்ற தூதுச் செய்தி வெளிப்படும்.
- இஸ்லாத்தின் போதனையில் மார்க்கத்தில் ஏதாவதொரு வகையில் பலவந்தத்திற்கு முற்றிலும் இடமில்லை.
- இங்கு அஹ்மதிய்யா ஜமாஅத்தை தவிர பல்வேறு நாடுகளிலிருந்து முஸ்லிம்கள் வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கும் கூட நான் இதையே கூறுவேன். அதாவது, இஸ்லாத்தின் போதனை அன்பு மற்றும் நேசத்தின் போதனையாகும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.
- இந்த நாட்டின் அரசாங்கம் அல்லது குடிமக்கள் அகதிகளுக்கு இங்கு தங்குவதற்கான இடத்தை தந்திருக்கின்றது. இந்த உயர்வான ஒழுக்கத்திற்கான பதிலை உயர்வான ஒழுக்கத்தின் மூலமாகவே தருவது இந்த அகதிகளின் பணியும் ஆகும்.

## ஜெர்மனியிலுள்ள Plungstadt நகரத்தில் அஹ்மதிய்யா பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சியில் ஹுஸூர் அவர்களின் எழுச்சிமிகு சொற்பொழிவு

2016 -ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 -ஆம் தேதி ஜெர்மனியிலுள்ள Plungstadt நகரத்தில் அஹ்மதிய்யா பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்படுவதற்காக ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. ஹுஸூர் அய்யதஹுல்லா -ஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் பள்ளிவாயிலுக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். துஆ செய்தார்கள். ஹுஸூர் அவர்களின் எழுச்சிமிக்க உரை கீழே தரப்படுகின்றது. (ஆசிரியர்)

தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் தஸ்மிய்யாவிற்குப் பிறகு ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனிக்கு பல்வேறு இடங்களில் பள்ளிவாயில்களைக் கட்டுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்து வருகின்றது. இது அல்லாஹ்வின் பேரருளும் பேருபகாரமும் ஆகும். இந்த வகையில் எங்கு இறைவனை வணங்குவதற்காக ஓர் இடம் கிடைக்கின்றதோ அங்கு ஜமாஅத்தின் அறிமுகமும் ஏற்பட்டு விடுகின்றது. மக்களுக்கு ஜமாஅத் தொடர்பாக இருந்து வரும் அபாயம் பற்றிய அச்சமும் விலகி விடுகின்றது. எனவே, இவ்வகையில் பள்ளிவாயில், அறிமுகத்திற்கான மிக முக்கியமான பங்கை வகிக்கின்றது. இந்த நகரம் இடம்பெயர்ந்து வந்தவர்களை வரவேற்றது. அவர்களை தன்னுடன் சேர்த்துக் கொண்டது. அவர்களை தனக்குள் ஈர்த்துக் கொண்டது. வந்தவர்களும் கூட இந்த நகரத்திலுள்ள மக்களுடன் நல்ல தொடர்புகளை உருவாக்கி தாமே அவர்களுடன் ஒன்றி விட்டனர் என்று அமீர் சாஹிப் அவர்கள் கூறினார்கள். இவ்வாறு இரண்டு பக்கங்களிலிருந்தும் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் ஒன்றி விடுவது ஒரு முக்கிய பணியாகும். நகரத்திலுள்ள மக்கள் வெளியிலிருந்து வந்திருப்பவர்களை தங்களுடன் சேர்த்துக் கொள்வதற்கு விரும்பாமல் அவர்களிடமிருந்து தொலைவில் இருக்க விரும்பினால் பிறகு ஒருவர் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் இந்த இடைவெளி நிலைத்திருக்கும். எனவே, இதன் அடிப்படையில் இந்த நகரத்திலுள்ள மக்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் வெளியிலிருந்து வந்தவர்களை குறிப்பாக அஹ்மதிகளை தங்களுடன் ஈர்த்துக் கொண்டனர். இதுவே அஹ்மதிகளின் நற்பண்பாகவும் இருக்க வேண்டும். அதாவது உள்ளூர் மக்கள் அவர்களோடு நாம் இருப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளனர். நம்மை அவர்களுடன் சேர்த்துக் கொண்டனர். பிறகு ஒருவர் தனது சிறந்த நண்பருடன் வைத்திருக்கும் தொடர்புகளைப் போன்றே நாமும் அவர்களுடன் தொடர்பு வைத்திருக்க வேண்டும். நாம் அவர்களது எல்லா தேவைகளையும் நிறைவு செய்து அவர்களுக்கு பயன்தரக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஜமாஅத்தின் பொதுத் தொண்டு நிறுவனங்கள் மிகவும் அதிகமாக தொகையை வழங்கியிருக்கின்றது என்று ஜெர்மனியைப் பற்றி குறிப்பிடும் போது அமீர் சாஹிப் அவர்கள் கூறினார்கள். இது இந்த நகரத்தின் மக்கள் மீது அவர்கள் செய்துள்ள எந்தவொரு பேருபகாரமும் அல்ல. பொதுத் தொண்டு செய்வது மற்றும் மக்களுக்கு பயன் தரக்கூடிய செயல்களைச் செய்வது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பணியாகவே இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது ஃபார்ஸி கவிதையில் 'எனது நோக்கமே படைப்பினங்களுக்குத் தொண்டு செய்வதாகும்' என்று கூறியுள்ளார்கள். எனவே, இந்த முக்கிய பணி ஒவ்வோர் அஹ்மதியின் கடமையாக இருக்கின்றது. இதற்காக நாம் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும்.

வந்திருந்த சொற்பொழிவாளர்கள் தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர். அவர்கள் வெளிப்படுத்திக் கூறியுள்ள கருத்துக்களை அடிப்படையாக வைத்து நான் சில விஷயங்களைக் கூறுவேன். அமீர் சாஹிப் கூறிய கருத்துக்கள் தொடர்பாக நான் ஏற்கனவே கூறி விட்டேன். ஒரு விஷயத்தை அவர்கள் கூறினார்கள். அதாவது, இந்த நகரம் 1886 -ஆம் ஆண்டில் குடியமர்த்தப்பட்டது. 1880 -களில்தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் இஸ்லாத்திற்கு தொண்டு செய்வதற்கான தனது கடமையைச் செய்தார்கள். இஸ்லாத்தை தற்காக்கும் வகையில் பல விஷயங்களையும் எழுதினார்கள். இஸ்லாத்தின் உண்மையான போதனையை உலகிற்கு விளக்கிக் கூறினார்கள். இறுதியில் 1889 -ல் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கான அடித்தளத்தை நிறுவினார்கள். எனவே, 1880 -களில் வந்த வருடங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்ட வருடங்களாக இருக்கின்றன. அந்த சமயத்தில் அன்னார் இஸ்லாத்தின் சரியான போதனைகளை உலகிற்கு கூறுவதற்கும் மார்க்கத்தில் உருவாகி விட்ட சீர்கேடுகளையும் தீமைகளையும் அகற்றுவதற்காகத்தான் அல்லாஹ் என்னை அனுப்பியுள்ளான் என்று வாதம் செய்தார்கள். அந்த சமயத்தில் அவர்களது நோக்கம் முழு உலகம் வரை இஸ்லாத்தின் சரியான போதனையை எட்டவைப்பதாகும். ஓர் இறை அறிவிப்பில் அல்லாஹ் அவர்களை நோக்கி, 'நான் உமது பிரச்சாரத்தை பூமியின் எல்லைகள் வரை எட்ட வைப்பேன்' என்று கூறினான். எந்தக் காலத்தில் இந்த நகரத்திற்கான அடித்தளம் நிறுவப்பட்டதோ எந்த வருடங்களில் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டதோ அதே நாட்களில் குடியமர்த்தப்பட்ட ஒரு சிற்றூரில் அஹ்மதிய்யத்தும் சென்று சேர்ந்து விடும் என்றும் இஸ்லாத்தின் சரியான போதனைகளைப் பின்பற்றி நடப்பவர்கள் அங்கு சென்று சேர்வார்கள் என்றும் எவரால் கூற முடியும்? இன்று 130 வருடங்கள் கடந்த பிறகு அந்த மக்கள் இங்கு வந்து சேர்ந்தது மட்டும் அல்லாமல் 130 வருடங்களுக்குப் பிறகு அவர்கள் தமது பள்ளிவாயிலையும் இங்கு கட்டுகின்றனர். எனவே, அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் நான் உமது பிரச்சாரத்தை பூமியின் எல்லைகள் வரை எட்ட வைப்பேன் என்று செய்திருந்த வாக்குறுதி நிறைவேறி விட்டது என்பதற்கு இதுவும் ஓர் அடையாளமாகும்.

பள்ளிவாயில் கட்டுவதற்கான நோக்கம் என்ன? அல்லாஹ்வை நாம் வணங்க வேண்டும் என்பதே எல்லாவற்றையும் விட பள்ளிவாயிலின் மிகப் பெரும் நோக்கமாக இது இருக்கின்றது. நம்மைப் படைத்த அந்த இறைவன் முன்னால் நாம் குனிய வேண்டும். அவன் அனைவரது இறைவனாக இருக்கின்றான். அல்லாஹ் முஸ்லிம்களின் அல்லாஹ் மட்டுமல்ல. அவன் யூதர்களுக்கும் கூட அல்லாஹ் ஆவான். கிறிஸ்தவர்களுக்கும் கூட அல்லாஹ் ஆவான். இந்துக்களுக்கும் கூட அல்லாஹ் ஆவான். உங்களது வாழ்வின் நோக்கம் நம்மைப் படைத்த அந்த இறைவனை வணங்குவதாகும். அவன் இந்த உலகிற்கு பல அழகான பொருள்களைத் தந்துள்ளான். இரண்டாவது நோக்கம், அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு தொண்டு செய்வதாகும் என்பதை உலகிற்கு எடுத்துக் கூறுவதே நமது குறிக்கோள் ஆகும். இதுவே இஸ்லாமிய போதனையின் சுருக்கமாகும். அதாவது முதலாவதாக, உங்களது இறைவனை வணங்குங்கள். அவனுக்குரிய உரிமையைச் செலுத்துங்கள். இரண்டாவதாக, அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கான உரிமையைச் செலுத்துங்கள். அவற்றிற்காக தொண்டு செய்யுங்கள். ஜெர்மனியின் தொகை இங்கு செலவிடப்பட்டுள்ளது என்பதை நானும் குறிப்பிட்டிருந்தேன். அமீர் சாஹிப் அவர்களும் இதைப் பற்றி குறிப்பிட்டுக் கூறியிருந்தார்கள். இது அவர்கள் செய்துள்ள பேருபகாரம் அல்ல. மாறாக, இது இங்குள்ள மக்களின் உரிமையாகும். அதை நாம் செலுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம்.

மேயர் அவர்களுக்கும் இங்குள்ள மக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். மேயர் அவர்கள் அபாயம் பற்றிய அச்சம் இருந்ததைக் குறிப்பிட்டிருந்தார்கள். மனிதனுக்கு ஒரு விஷயத்தைப் பற்றிய அறிவு இல்லாதபோது சில நேரங்களில் மனிதன் பாதுகாப்பைக் கருத்தில் கொள்கின்றான் என்பது சரிதான். ஏற்கனவே இங்கு கூறப்பட்டிருப்பது போன்றே இந்த பாதுகாப்பைக் கருத்தில் கொண்டதன் காரணமாக இங்குள்ள மக்கள் நமக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். ஆனால், அந்த எதிர்ப்பும் மெல்ல மெல்ல அகன்று விட்டது அல்லது பெரும்பாலார் இந்த

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 | Thursday 20 OCTOBER 2016 | Issue No. 33

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

எதிர்ப்பைப் பற்றி கவலைப்படவில்லை. மேலும் ஜமாஅத் அழகிய முறையில் மக்களுடன் நடந்து கொள்ளும் விதம், பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் இணைந்து வாழ்வது, ஒற்றுமையாக இருப்பது ஆகியவற்றை கண்முன் நிறுத்தியவாறு கவுன்ஸிலும் இங்குள்ள மக்களும் நமக்கு பள்ளிவாயிலைக் கட்டுவதற்கான அனுமதியைத் தந்துள்ளனர். இப்போதும் கூட அபாயம் பற்றிய அச்சம் எந்த மக்களிடம் இருந்து வருகின்றதோ அதுவும் கூட மெல்ல மெல்ல அகன்று விடும். குறிப்பாக பள்ளிவாயில் கட்டப்பட்டு விட்டால் பள்ளிவாயில் கட்டியதனால் எந்த இழப்பும் ஏற்படவில்லை. மாறாக, அதனால் நற்பலனே ஏற்பட்டிருக்கின்றது என்பது அவர்களுக்கு தெரிந்து விடும். அஹ்மதி முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கு எத்தகையதோர் இடம் கிடைத்திருக்கின்றது என்றால் அங்கிருந்து அன்பு மற்றும் நேசத்தின் முழக்கங்களே எழுப்பப்படுகின்றன. அங்கிருந்து அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவத்தின் கலப்பற்ற தூதுச் செய்தியே வெளிப்படும் என்பது அவர்களுக்கு தெரிந்து விடும். எனவே, பள்ளிவாயில் கட்டுவதற்கான அனுமதி கிடைப்பதற்கு தங்களது பங்கை செலுத்தியுள்ள அந்த அனைத்து மக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இது ஒரு பெரிய பள்ளிவாயில் அல்ல. இதற்கு பெரிய மினாராக்களும் இல்லை. எனவே, மக்கள் கவலைப்பட வேண்டிய தேவையில்லை என்று அமீர் ஸாஹிப் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். பள்ளிவாயில் கட்டப்படுவதனால் நாம் கவலைப்பட வேண்டிய நிலை இருக்கின்றது என்றால், எவராவது குழப்பத்தை பரப்ப விரும்புகின்றனர் என்றால் அதற்காக அவருக்கு பெரிய பள்ளிவாயிலின் தேவை இல்லை. அவ்வாறே சிறிய பள்ளிவாயிலாக இருந்தாலும் அதனால் அவருக்கு எந்தக் குறைவும் வந்து விடாது. குழப்பத்தை ஏற்படுத்துபவர் ஓர் அறையில் அமர்ந்தவாறு குழப்பத்திற்கான சூழ்ச்சியை வகுக்க முடியும். எனவே, இது ஒரு பெரிய விஷயமல்ல. எனது கருத்தின்படி இங்கு பெரிய பள்ளிவாயில் கட்டப்பட்டால் அதன் மூலமாக அதிகமான அன்பு மற்றும் நேசத்தின் மிகப்பெரும் காட்சிகள் அதிகமாக தென்படும். எனவே, அமீர் ஸாஹிப் கூறிய இந்த விஷயத்தின் காரணமாக சிறிய பள்ளிவாயில்கள் அன்பு மற்றும் நேசத்தின் முழக்கங்களை எழுப்பக் கூடியவையாகும். பெரிய பள்ளிவாயில்கள் குழப்பத்தின் வேராக இருக்கின்றன என்று நீங்கள் கருதமாட்டீர்கள் என்று நான் நம்புகின்றேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாயில்கள் எந்த அளவு பெரிதாக இருக்குமோ அதே அளவு மக்களுக்கு தொண்டு செய்வதற்காக எங்கள் தரப்பிலிருந்து பேரன்பு மற்றும் நேசத்தின் தூதுச் செய்தி மக்களைச் சென்றடையும்.

மேயர் அவர்களும் தனது சில கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். நிச்சயமாக மனிதன் என்ற நிலையில் நாம் அனைவரும் ஒருவராவோம். எல்லா மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் அவரவருக்குரிய உரிமை இருக்கின்றது என்று அவர்கள் மிகவும் திறந்த உள்ளத்துடன் கூறினார்கள். இஸ்லாத்தின் போதனையும் இதுவேயாகும். அதாவது, ஒவ்வொரு மதத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் அவரவர்களுக்குரிய உரிமை இருக்கின்றது. மதம் தொடர்பான விவகாரம் உள்ளத்துடன் தொடர்புடையதாகும். எவரையும் எந்தவொரு மதத்திலும் பலவந்தமாக இணைத்து விட முடியாது. மேலும் ஒருவர் ஒரு மதத்தை ஏற்றுக் கொள்வதை பலவந்தமாக தடுக்கவும் முடியாது. மார்க்க விவகாரத்தில் எவ்வித பலவந்தமும் இல்லை என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. இது திருக்குர்ஆனின் மிகத் தெளிவான கட்டளையாகும். அவ்வாறு பலவந்தம் இல்லை என்கின்ற போது ஏதாவதொரு முஸ்லிமின் தரப்பிலிருந்தும் ஒரு முஸ்லிம் அல்லாதவருக்கு இழப்பை ஏற்படுத்தக்கூடிய ஏதாவதொரு விஷயம் வெளிப்பட்டால் அது தவறாகும். அது திருக்குர்ஆனின் போதனைக்கு மாற்றமானதாகும். இன்னும் சொல்வதென்றால், திருக்குர்ஆன் எதுவரை கூறியிருக்கின்றது என்றால் ஒருவர் முஸ்லிமான பிறகும் கூட இஸ்லாத்தை கை விட்டு விடுகின்றார் என்றால் அவ்வாறு செய்வதற்கான் அனுமதி அவருக்கு இருக்கின்றது. இதில் எந்த பலவந்தமும் இல்லை. ஏனென்றால், இஸ்லாத்தின் போதனையில் மார்க்கத்தில் எவ்வகையான பலவந்தத்திற்கும் முற்றிலும் இடமேயில்லை.

சுருக்கமாக, நான் கூறுவது என்னவென்றால், இந்த அடிப்படையில் எல்லா மதங்களையும் ஏற்றுக் கொள்பவர்கள் இந்த நாட்டில் வாழ்கின்ற போது ஒரு சமுதாயம் என்ற நிலையிலும், ஒரு ஜெர்மனி குடிமகன் என்ற நிலையிலும் அவர்கள் இங்கு வாழ்கின்றனர். வெளியிலிருந்து வருபவர்கள் வேறு ஒரு நாட்டின் ஒரு பகுதியிலிருந்து இங்கு வந்து இப்போது ஜெர்மனியின் குடிமகனாக இருக்கின்றார் என்றால் அவர் அந்த நாட்டிற்கு அல்லது அந்த பகுதிக்கு தொண்டு செய்ய வேண்டியது அவர் மீது கடமையாகும். அது அந்த நாடு மற்றும் அந்தப் பகுதிக்கும் உரிய உரிமையாகும்.

இங்கு புதிதாக வரக்கூடியவர்களில் அஹ்மதிய்யா ஜமாஅத்தை தவிர பல்வேறு நாடுகளிலிருந்து வருகின்ற முஸ்லிம்களும் இருக்கின்றனர். அவர்களிடத்திலும் நான் இதைதான் கூறுவேன். அதாவது, இஸ்லாத்தின் போதனை அன்பு மற்றும் நேசத்தின் போதனையாகும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்றே இஸ்லாத்தின் போதனைகள் இரண்டு அடிப்படை கொள்கைகளைக் கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று, அல்லாஹ்விடம் அன்பு கொள்வதாகும். அவனுக்குரிய உரிமையைச் செலுத்துவதாகும். இரண்டாவது அல்லாஹ்வின் படைப்பினங்கள் மீது அன்பு செலுத்துவதாகும். அவற்றிற்குரிய உரிமையைச் செலுத்துவதாகும்.

நான் ஏற்கனவே கூறியது போன்றே இங்கு வாழ்பவர்கள் இடம்பெயர்ந்து இங்கு வந்தவர்களுக்கு இங்கு வசிப்பதற்கு இடம் தந்துள்ளார்கள். ஏராளமான அகதிகள் இங்கு வருகின்றார்கள். இந்த நகரத்தில் அவர்கள் வந்துள்ளார்களா? இல்லையா? என்பதைப் பற்றி எனக்கு தெரியாது. எந்நிலையிலும் இந்த நாட்டில் ஏராளமான அகதிகள் வந்திருக்கின்றனர். இந்த நாட்டின் அரசாங்கமும் அல்லது இங்குள்ள குடிமக்களும் அகதிகளுக்கு இங்கு தங்குவதற்கு இடம் தந்துள்ளார்கள் என்றால் இந்த அகதிகளும் மற்றவர்கள் வெளிப்படுத்திக் காட்டியிருக்கும் உயர்வான ஒழுக்கத்திற்கு எதிரில் தாங்களும் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுபவர்களாக இருக்க வேண்டும். அன்பிற்கு அன்பின் மூலமாக பதில் கூற வேண்டும். அவர்கள் தம்மை இந்த நாட்டின் ஓர் அங்கமாக ஆக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு இங்கு வந்த பழைய மேயர் அவர்கள் அரசியலில் எனக்கு மிகுதியான ஈடுபாடு இல்லை. எனவே, நான் முதலில் சொற்பொழிவாற்ற மறுத்து விட்டேன் என்று கூறினார்கள்.

நாம் மனிதத் தன்மையைக் கருத்தில் கொண்டவாறே இங்கு வந்திருக்கின்றோம். மனிதத் தன்மைக்கு அரசியலுடன் எந்தத் தொடர்பும் இல்லை. ஒவ்வொருவருடைய பார்வையும் வெவ்வேறு விதத்தில் இருக்கும். பழைய மேயர் அவர்கள் நமக்காக பல பணிகளைச் செய்துள்ளார்கள். பழைய மேயரின் காலத்தில் அதிகமாக பணிகள் நடந்தன என்று புதிய மேயர் அவர்கள் கூறினார்கள். நான் சரியாகப் புரிந்திருக்கின்றேன் என்றே நினைக்கின்றேன். இந்த மேயரின் காலத்தில்தான் பள்ளிவாயில் கட்டுவதற்காக நமக்கு இடம் கிடைத்தது. எனவே, நாம் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். நாங்கள் அஹ்மதிகள் என்ற நிலையில் அவர்களுக்கும் இங்கு வாழ்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் உறுதியளிக்கின்றோம். அதாவது, பள்ளிவாயில்கள் இறை வணக்கத்தைப் பேணுவதற்கும் மார்க்கக் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கும் நிரப்பப்படுகின்றன. யார் எந்த மதத்துடன் தொடர்புள்ளவராக இருக்கின்றார் என்பதற்கு இதனுடன் எந்தத் தொடர்பும் இல்லை. அவ்வாறே அவர் எந்த அரசியல் கட்சியுடன் தொடர்பு வைத்திருக்கின்றார் அல்லது எந்த அளவுக்கு அவருக்கு அரசியலில் பங்கு இருக்கின்றது என்பதற்கு இதனுடன் எந்தத் தொடர்பும் இல்லை. எனவே, இந்த விஷயத்தை நம்மில் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். இங்கு வசிக்கின்ற அஹ்மதிகளும் இதை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, நமது ஒவ்வொரு பணியும் அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். முன்பு இருந்த மேயரிடமிருந்து இப்போது நமக்கு எதுவும் கிடைக்காமல் இருந்தாலும் கூட நாம் அவர்களுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்கின்றோம். அவர்களது காலத்தில்தான் நமக்கு இந்தப் பள்ளிவாயிலைக் கட்டுவதற்கான அனுமதி கிடைத்திருக்கின்றது. அவர்கள் நம்மீது செய்துள்ள இந்த பேருபகாரத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். புதிய மேயருக்கு நன்றி செலுத்துபவர்களாகவும் நாம் இருக்க வேண்டும். அவர்கள் முதலில் இருந்த மேயர் செய்த பணியைத் தொடர்ந்து செய்தார்கள். மேலும் நமக்கு இதற்கான அனுமதியை தந்தார்கள். எனவே, நான் இதற்கு முன்பும் கூறியிருந்தது போன்றே இவ்வகையில் நாம் ஒவ்வொருவருக்கும் நன்றி செலுத்துபவர்களாக இருக்கின்றோம்.

முன்னாள் மேயர் அவர்கள் தமது கருத்தை தெரிவித்தவாறு உங்களுக்கு நகரத்திற்கு வெளியே இடம் கிடைத்திருப்பது உங்களுக்கு கவலையளிக்கும் விஷயமல்ல என்று கூறினார்கள். எங்களுக்கு இது மிகவும் அழகிய இடமாக தெரிகிறது. ஓர் அழகிய பகுதியில் பசுமையான இடத்தில் இன்னோர் அழகிய கட்டடம் எழுப்பப்படும். அதிலிருந்து அன்பு மற்றும் நேசத்தின் முழக்கங்கள் எழும். அந்தக் கட்டடத்திற்கு வரும் மக்கள் அன்பு மற்றும் நேசத்தை விநியோகம் செய்பவர்களாக இருப்பர். விளைச்சலும் ஒரு பயனைத் தருகின்றது. தோட்டமும் பயனைத் தருகின்றது. பள்ளிவாயிலும் ஒரு விளைநிலமாக இருக்கின்றது. இது எத்தகைய ஒரு பகுதியாக இருக்கின்றது என்றால் அதில் எத்தகைய செடிகள் வளர்ந்து மரமாகின்றன என்றால் அவற்றில் அன்பு மற்றும் நேசத்தின் கனிகள் உருவாகின்றன. அதிலிருந்தும் அதற்கு அருகிலுள்ள மக்கள் பலன் பெறுகின்றனர். இந்தப் பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு இந்த விஷயங்களை இங்குள்ள மக்கள் பார்ப்பார்கள் என்று நாம் நம்புகின்றேன் - இன்ஷா அல்லாஹ்.

*(தொடரும்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad